பக்கங்கள்:08

# காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 07 வள்ளுவர் ஆண்டு 2054 வைகாசி 17 புதன்கிழமை 31.05.2023 கதிர்202

### உயிர்த்த ஞாயிறு தாக்குதல்களுக்காக

# நீதி கேட்டு பேராயர் ஐ.நா. படியேறினார்



சுயாதீனமான, வெளிப்படையான விசாரணைக்கு வலியுறுத்து உயிர்த்த ஞாயிறு தாக்குதலின் பின்னணி குறித்து சுயாதீனமான, வெளிப்படையான விசாரணை ஒன்று நடத்தப்படவேண்டும் என்றுஐக்கியநாடுகள்மனித உரிமைகள் ஆணையாளரைநாடியுள்ளார்இலங்கை கத்தோலிக்கத் திருச்சபைப் பேராயர் கர்தினால் மல்கம் ரஞ்சித். ஜெனிவாவில் ஆணையாளர் வாக்கர் ட்ரக்கைச் ☞2

## இது ரகசியம் அல்ல!

ஒரு காலத்தில் தமிழ் இனத்தின் விடயலுக்காக வந்துதித்த தலைவர் என்று சிலர் நீதியரசர் விக்னேஸ்வரனைத் தலையில் தூக்கி வைத்துக் கொண்டாடினார்கள். வடக்கு மாகாண சபையில் தமிழ் அரசுக் கட்சி உறுப்பினர்கள் அவருக்கு எதிராகச் செயற்பட்டபோது, அவரைக் காப்பாற்றிக்கொள்ள பெரும் இளைஞும் பட்டாளம் ஒன்று திரண்டு வந்து அவருக்கு தஞ்சம் அளித்தது. தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி மற்றும் அப்போது தமிழ் மக்கள் பேரவை என்று இயங்கியவர்களும் இதன் பின்னணியில் இருந்தார்கள். அதன் பின்னணியில் விக்னேஸ்வரனை அரசியல் மீள் எழுச்சிக்குப் பயன்படுத்திக்கொள்ளும் நோக்கம் அவர் பின்னால் நின்ற எல்லாக் கட்சிகளுக்கும் இருந்தது. ஏனெனில் அதுவரையில் விக்னேஸ்வரன் தொடர்பபில் கட்டப்பட்டிருந்த பிம்பம் அவரது வெளித் தோற்றத்தையும்வெளிஉரைகளையும் ☞2

## ரஜினியின் உதவியை நாடியுள்ள இலங்கை

இலங்கையில் சுற்றுலாத்துறையை மேம்படுத்ததென்னிந்தியநடிகரானரஜினிகாந்தின் உதவியை இலங்கை நாடியுள்ளது.

தென்னிந்தியாவைச் சேர்ந்த உலகப் புகழ்பெற்ற நடிகரான ரஜினிகாந்தை இலங்கையின் துணை உயர்ஆணையர் ☞2



## இணையம் மூலம் வீட்டுக்கு மூன்றே நாளில் கடவுச் சீட்டு

### அறிமுகமாகிறது புதிய முறைமை

அரச சேவையை டிஜிட்டல் மயமாக்கும் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவின் திட்டத்திற்கு அமைவாக கடவுச்சீட்டைப்பெற இணையத்தின் ஊடாக விண்ணப்பிக்கும் புதிய முறை எதிர் வரும்தினங்களில்அறிமுகப் படுத்தப்படும் என்று குடிவரவு மற்றும் குடியகல்வு கட்டுப்பாட்டாளர் நாயகம் ஹர்ஷ இலுக்பிட்டிய தெரிவித்தார்.

ஜனாதிபதி ஊடகப் பிரிவினால்தயாரிக்கப்பட்ட'101 கதா' நிகழ்ச்சியில் அண்மையில்கலந்துகொண்டுகருத்து தெரிவிக்கும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

புதிய முறையின்படி ஒருவர்வீட்டில்இருந்தபடியே இந்தச்சேவையைப்பெறமுடியும். www.immigration.gov.lk என்ற இணையதளத்திற்குள் பிரவேசித்து, கடவுச்சீட்டுக்கு விண்ணப்பித்தல்(ஒன்லைன் முறை)என்றஇடத்தில்,உரிய தரவை உள்ளிட்ட பின்னர், தகவலைச் சரிபார்த்த பிறகு பதிவு செய்யவேண்டும்.

அதன் பின்னர் உரிய விண்ணப்பம் விண்ணப்பதாரருக்கு அனுப்பிவைக் கப்படும். அதனைப் பூர்த்தி செய்து மென் பிரதியை பதிவேற்றம் செய்த பின்னர் தான் கடவுச்சீட்டை 3 நாட்களிலா அல்லது ☞2

## சீன அயலுறவு பிரதி அமைச்சர் சஜித்துடன் கொழும்பில் பேச்சு

### பிராந்திய உறுதிப்பாட்டுக்கான சர்வதேச உறவு குறித்து ஆராய்வு



பிராந்திய அமைதி மற்றும் நல்லிணக்கத்தைப் போன்று உறுதிப்பாட்டை வலுப்படுத்தும் சர்வதேச உறவுகளைக்கட்டியெழுப்புவது தொடர்பில் சீன அயலுறவுத்துறை பிரதி அமைச்சருடன் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச கலந்துரையாடியுள்ளார்.

சீனாவுக்கும் இலங்கைக் கும் ☞5

## வீதி விபத்துகளில் குழந்தை உட்பட 10 பேர் ஒரே நாளில் பரிதாபச் சாவு

இலங்கையில் வீதி விபத்துக்கள் அதிகரித்து வருகின்றன. அந்தவகையில் நேற்று(30) மாத்திரம் மூன்று வயதுக் குழந்தை உட்பட 10 பேர்உயிரிழந்துள்ளனர்என்று பொலிஸார் தெரிவித்தனர்.

கம்பஹா-நீர்கொழும்பில் பாதசாரிகள் இருவரை லொறி மோதியதில் இருவர் சாவடைந்துள்ளனர். மூன்று வயது ஆண் குழந்தையும், அவரின் 29 வயதான தந்தையுமே இந்த விபத்தில் உயிரிழந்துள்ளனர்.

கண்டி - கம்பளையில் பஸ் மோதியதில் 60 வயதான பெண் ஒருவர் சாவடைந்துள்ளார். பஸ்ஸை விட்டு இறங்கி வீதியைக் கடக்க முற்பட்ட வேளை அவர் விபத்துக்குள்ளாகியுள்ளார்.

குருநாகல் - குளியாப்பிட்டியில் காரும் ஓட்டோவும் நேருக்கு நேர் மோதியதில் ஓட்டோ சாரதி சாவடைந்துள்ளார். 42 வயதான குடும்பஸ்தரே உயிரிழந்துள்ளார்.

புத்தளம் - ஆனமடுவ, பெரியகுளம் பகுதியில் வான் மோதியதில் பாதசாரி ஒருவர் சாவடைந்துள்ளார். 68 வயதான வயோதிபரே உயிரிழந்துள்ளார்.

கொழும்பு - வெள்ளவத்தையில் தனியார் பஸ்ஸுடன் மோட்டார் சைக்கிள் மோதியதில் ஒருவர் ☞5

## அமைச்சரவைக்குச் சென்று முட்டாளாகத் தயாரில்லை

### விளாசுகிறார் மொட்டு கட்சி எம்.பி.

அமைச்சரவைக்குச் சென்று முட்டாளாக நான் தயாரில்லை என்று விளாசி இருக்கிறார் பொது ஜன பெரமுன (மொட்டுக் கட்சி) நாடாளுமன்ற உறுப்பினர் விமலவீர திஸநாயக்க.

பத்தரமுல்லவில் உள்ள கட்சியின் தலைமையகத்தில் செய்தியாளர்கள் மத்தியில் அவர் இதனைத் தெரிவத்தார். அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:

நான் அம்பாறையை உள்ளடக்கிய திகாம டுல்ல மாவட்டத்தில் மொட்டுக் கட்சியின் தலைவராக இருந்து கொண்டடு மிகுந்த சிரமத்துக்கு மத்தியில் கட்சியைக் கட்டியழுப்பினேன்.

ஐந்துவருடங்களாகமிகக் கடினமாகச் செயற்பட்டேன். கிராமங்கள் தோறும் சென்றேன். வீடுகள் தோறும் சென்றேன். தற்போது எனது இரு சீறுரங்களும் ☞2

### காணி மோசடி வழக்கில்

## புத்தூரைச் சேர்ந்த நொத்தாரிசு கைது

காணியை மோசடியாக விற்பனை செய்வதற்காகப் போலியான கையெழுத்திட்டு உறுதிதயாரித்தகுற்றச்சாட்டில் புத்தூரைச்சேர்ந்தநொத்தாரிசு ஒருவர்யாழ். மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் விசாந்த தலைமையிலான விசேட குற்ற விசாரணைப் பிரிவினரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

2019 ஆம் ஆண்டு கொடிகாமம் இத்தாவில் பகுதியில் போலியான கையெழுத்திட்டு உறுதி தயாரித்த குற்றச்சாட்டிலேயே இவர் நேற்று கைது செய்யப்பட்டுள்ளார்.

காணியை மோசடியாக விற்பனை செய்தவர்களும் விரைவில் கைது செய்யப்படவுள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்தனர். (02)

### மதப் பிரச்சினைகளை ஏற்படுத்தி

## அமைதியைக் குலைப்போருக்கு எதிராக கடும் சட்ட நடவடிக்கை

மத ரீதியான பிரச்சினைகளை ஏற்படுத்தி அமைதியைச் சீர்குலைக்க முயற்சிப்பவர்களுக்கு எதிராக கடுமையான சட்ட நடவடிக்கை எடுக்கப்படும்என்று பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் பிரமித பண்டார தென்னகோன் தெரிவித்தார்.

மதங்களை அடிப்படையாகக் கொண்டு பல்வேறு கருத்துக்கள் முன்வைக்கப் பட்டுவருகின்றநிலையில்அது குறித்து அறிக்கையொன்றை வெளியிட்ட அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் மேலும்தெரிவித்துள்ளதாவது:

நாட்டில் மதப் பிரச்சினைகளைத் தூண்டிவிட்டு, அமைதியான சூழ்நிலையை சீர்குலைக்கப்பலதரப்பினரும் முயற்சித்து வருகின்றனர்.

அண்மைக் கால மாக முகம்கொடுத்த கடுமையான பொருளாதார நெருக்கடியிலிருந்து மீள்வதற்கான பாதையைநோக்கிச்சென்றுக் கொண்டிருக்கும்முக்கியமான தருணத்தில், நாட்டில் மீண்டும் ஒரு நெருக்கடியை ஏற்படுவதற்கான தெளிவான அறிகுறிகளைத் தற்சமயம் காணக்கூடியதாக உள்ளது.

நாட்டில் மதப் பிரச்சினைகளை தூண்டிவிட்டு நிலவும் ☞5

## நாட்டை கட்டியெழுப்பும்போது ஒரு சக்தி அதைக் குழப்புகின்றது

### இப்படிக் கவலைப்படுகிறார் நீதி அமைச்சர்

நாட்டைக் கட்டியழுப்புவதற்கு முயற்சிக்கும்போது அதனைக் குழப்புவதற்கு ஒரு சக்தி முனைவதாக நீதியமைச்சர் ஜனாதிபதி சட்டவாளர்கலாநிதிவிஜேதாச ராஜபக் ஷ தெரிவித்தார்.

அமைச்சில் நேற்றைய தினம்நடத்திய ஊடகவியலாளர்சந்திப்பில்கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

கருத்துச் சுதந்திரம் உறுதிப்படுத்தப்பட்டுள்ளதைப் போன்று அதன் வரையறைகளும் அரசமைப்பின் 15ஆம் பிரிவில் ☞5

## தாயும் மகளும் வெட்டிக்கொலை

தாயும் மகளும் வீட்டில் வைத்துக் கொடூரமாக வெட்டிப்படுகொலைசெய்யப் பட்டுள்ளனர்.

இந்தச் சம்பவம் இரத்தினபுரி - காவத்தையில் நேற்று (30) மாலை இடம்பெற்றுள்ளது என்று பொலிஸார்தெரிவித்துள்ளனர்.

45 வயதான தாயும், 22 வயதான மகளும் வீட்டில் தனியாக வசித்து வந்த நிலையில் இவ்வாறு வெட்டிக்கொலை செய்யப்பட்டுள்ளனர்.

சம்பவம் தொடர்பில் விசாரணைகளை மேற்கொண்டுவரும் ☞5

## ஆளுநரின் பணிப்பில் கிழக்கில் மரநடுகை



(வி.ரி.சகாதேவராஜா)

கிழக்குமாகாணஆளுநர் செந்தில் தொண்டமானின் பணிப்புரைக்கமைவாக கிழக்கு மாகாணத்தில் சகல விவசாயப் போதனாசிரியர் பிரிவுகளிலும் நேற்று மரநடுகை இடம் ☞5

## கிழக்கு பெருநகர அபிவிருத்திக்கான திட்டத் தயாரிப்புப் பணி தொடக்கம்

### ஜூன் மாதம் இறுதி மதிப்பாய்வுக்கு அமைச்சர் உத்தரவு



கிழக்கு மாகாணத்தில் பெருநகர அபிவிருத்தித் திட்டங்களைச் செயற்படுத்துவதற்ககான பணிகள் சிங்கப்பூர் நிறுவனத்தின் உதவியுடன் தொடங்கப்பட்டுள்ளன. இந்த அபிவிருத்தித் திட்டம் உடனடியாக ஆரம்பிக்கப்படவேண்டுமென சுட்டிக்காட்டிய அமைச்சர் பிரசன்ன ரண துங்க. அதன் இறுதி மதிப்பாய்வுப் பணிகளை ஜூன் மாதம் தொடங்கிவிடவேண்டும் என்றும் அதிகாரிகளுக்கு பணிப்புரை விடுத்தார்.

கிழக்கு பெருநகர அபிவிருத்திதிட்டம்தொடர்பில் அதிகாரிகளுடன் நேற்று ஆராய்ந்தார் அமைச்சர். தேவையான அறிவுறுத்தல்களையும் வழங்கினார். நகர அபிவிருத்தி அதிகார சபையின் கேட்போர் ☞5

## இனி இது .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அடிப்படையாகக் கொண்டே அமைந்திருந்தன.

ஆனால், விக்னேஸ்வரனைத் தாங்கள் பயன்படுத்திக்கொள்ள முடியாது அவர் தான்தங்களைப்பயன்படுத்தப் பார்க்கிறார், தங்கள் அரசியல் உழைப்பையெல்லாம்தனது அரசியல் முதலீடாக்கப் பார்க்கின்றார் என்கிற தெளிவு கிடைத்தபோதுஅவர்பின்னால் நின்ற கட்சிகள் எல்லாம் மெல்லக் கழன்றுவிட்டன. அதற்கிடையில் காலம் கடந்திருந்தது. விக்னேஸ்வரன் அதற்கிடையில் அனைவரின் அரசியல் உழைப்பையும் தனது முதலீடாக்கியிருந்தார். அந்த அடித்தளத்தில் அவர் தனக்கான அரசில் அடித்தளத்தைப் பலமாகப் போட்டுக் கொண்டார்.

விக்னேஸ்வரன் அரசியலில் கஸ்டப்பட்டு முன்னுக்குவந்தவரல்லர். அவரை அழைத்து வந்து சிம்மாசனத்தில் அமர்த்தினார்கள். அவருக்கு அது பிடித்துக்கொண்டதால் அவர் அதைவிட்டு இறங்க மறுத்துவிட்டார். எல்லோரும் அவரைப் பயன்படுத்தப் பார்த்தார்கள். பதிலுக்கு அவர் எல்லோரையும் பயன்படுத்திக்கொண்டு தன்னைப் பலப்படுத்திக் கொண்டார். அவரை, அவரது கருத்தியலை, அரசியல்சார்புநிலைகளை ஆராயாமல் அரசியலுக்குள் கொண்டு வந்தவர்கள் இப்போது அவை பற்றி அவருடன் அதிருப்தியடைந்து நிற்கிறார்கள். அது யார் தவறு?

அவரது தமிழ் மக்கள் கூட்டணியின் மையக் குழு உறுப்பினரும் கிளிநொச்சி மாவட்ட அமைப்பாளருமான தனபாலசிங்கம் சுதாகரன் விக்னேஸ்வரனுக்கு எழுதிய கடிதம்தான் சமூக ஊடகங்கள் எல்லாவற்றிலும் இப்போது "ட்ரென்டிங்". அந்தக் கடிதத்தை அப்படியே வாசகர்களுக்கு இங்கு தருகின்றேன்.

நாடாளுமன்ற உறுப்பினர் திரு. க.வி.விக்னேஸ்வரன் அவர்களே,

2020ஆம் ஆண்டு தேர்தல் காலத்தில் நிகழ்ந்தேறிய ஒரு சம்பவம் தொடர்பில் ஊடகங்களில், ''அருந்தவபாலன்'' ''சாதி! நீங்கள் என்ன சாதியென கூற முடியுமா? என்று ஐங்கரநேசனிடம் விக்னேஸ்வரன் மின்னஞ்சல் வழியாக கேட்டார்'' என்று ஏப்ரல் 14 அன்று ஊடகங்கள் வெளியிட்ட அதிர்ச்சிச் செய்தியைக் கண்டு, அதற்கு மறுநாள் ஏப்ரல் 15 அன்று, இச் செய்தி தொடர்பில் "உண்மையுள்ள செய்தியா" என்று வினாவி, தங்களுக்கு மின்னஞ்சல் வழியாக கடிதம் ஒன்றை எழுதியிருந்தேன்.

அதற்கு தாங்கள் ஆங்கிலத்தில் எழுதியுள்ள பதிலின் சாராம்சத்தை முதலில் இங்கே குறிப்பிடுகிறேன். "நல்லது. நீங்கள் நேரடியாக என்னை கேட்டுள்ளீர்கள். என்னால் விளக்கம் தரமுடியும். ஆரம்பகாலத்தில் நாங்கள் மிக நெருக்கமாக இருந்தோம். ஐங்கரநேசனின் தாவரவியல் மற்றும் சூழலியல் தொடர்பான ஆளுமை மீது எனக்கு மிகவும் மதிப்பு இருந்தது. ஆம், தனிப்பட்ட மின்னஞ்சலில் சாதி தொடர்பில் கேட்டேன். யார் என்ன சாதி என்று எனக்கு தெரியாது. ஆட்களுடன் தொடர்புகொள்ளும் போது சாதியை பார்த்ததில்லை. இப்போதும் நான் சாதி பார்ப்பதில்லை. நான் வெள்ளாளரைவிட குறைந்த சாதியினரை நம்புவதாக என்னுடன் நெருக்கமானவர்கள் ஒரு குற்றசாட்டை என்மீது வைத்தனர். எனது உறவினர்கள்கூட இதைச் சொன்னார்கள். அருந்தவபாலன் குறிப்பிட்ட சாதியை சேர்ந்தவர் என்றும் வேறு சிலரையும் குறிப்பிட்டார்கள். அதில் ஐங்கரநேசனின் பெயரும் இருந்தது. நான் என்னுடைய அலுவலக பணியாளர்களிடம் ஐங்கரநேசனின் சாதி தொடர்பில் கேட்டேன். அதற்கு அவர்கள் பதில் அளிக்கவில்லை. ஆகவே ஐங்கரநேசனிடமே அவரது தனிப்பட்ட மின்னஞ்சலில் அவரது சாதியைப் பற்றிக் கேட்டேன். அவர் அதற்கு பதில் அளிக்கவில்லை. 'ஆகவே அவர் வெள்ளாளர் இல்லை' என முடிவு செய்தேன். அவர் என்ன சாதியாக இருந்தாலும் அவர்மீது மரியாதை வைத்தே இருக்கிறேன்'' என்று எனக்களித்த பதிலின் மூலம் மீண்டும் தங்களை யாரென்று மிகதுல்லியதாக வெளிப்படுத்தி உள்ளீர்கள்.

தங்கள் பதிலைப் பார்த்தும் நான் கடந்த மூன்று வருடங்களாக, சாதிப்பாகுபாடுகளால் சீழ் படிந்த சிந்தனைக் குரியவரை இனத்தின் விடிவுக்கானவர் என நினைத்து உயர்த்திப் பிடித்தமைக்காக வெட்கப்படுகிறேன். உடனடியாக பதில் எழுத வேண்டும் என்று எண்ணிய போதும், நேரமெடுத்து, நிதானமாக என் நம்பிக்கைக்குரிய சிலருடன் கலந்தாலோசித்த பின்னராகவும், வலிசுமந்த மாதத்தில் இதனைக் கிளறக்கூடாது என்ற எண்ணத்திலும், ஒன்றரை மாதங்களின் பின்னரே தங்களுக்கும் மத்தியகுழுவுக்கும் திறந்த மடலொன்றை எழுதுகிறேன்.

தமிழ்த் தேசிய அரசியல் என்பது சாதி மதம் கடந்த சமத்துவசிந்தனைகொண்டது. தங்களைப் போன்ற சிலர், சீழ் படிந்த சிந்தனைகளால் நிரம்பியவர்கள், காலம் காலமாக கட்டிக் காக்கப்பட்ட சாதிய சிந்தனையால் ஊதிப் பெருத்தவர்கள். இப்படியான எண்ணங்களை சகிக்கவோ, மன்னிக்கவோ முடியாது. அடியுடன் ஒழித்துக் கட்டப்பட வேண்டிய இச்சிந்தனை எமது இனத்திற்கும் சமூகத்திற்கும் தீங்கும் கேடும் ஆபத்தும் விளைவிக்கக்கூடியது.

கடந்த கால இன விடுதலைப் போராட்டத்தால் வேற்றுமைகள் களைந்து பல்லாயிரம் இளைஞர், யுவதிகள் தங்களை தியாகம் செய்து இம் மண்ணில் விதையாகினர். அதன் அடையாளமாகவே எமது நிலமும் அதன் அரசியலும் தொடர வேண்டும். அது தியாகங்களால் ஆன சிந்தனை. உயிர் தியாகங்களால் செப்பனிடப்பட்ட சமத்துவப் பாதை. அதற்காக செய்யப்பட்ட தியாகங்களும் கொண்ட உறுதிகளும் அளப்பெரியன. உங்களால் அவற்றையெல்லாம் புரிந்துகொள்ள ஒருபோதும் முடியாது என்பதைத்தான் இந்த விளக்கங்களில் உணரத் தலைப்படுகிறேன்.

ஏனெனில் பதினாறு வயதில் ஆயுதம் ஏந்தி, தன்னையும் தன் குடும்பத்தையும் அர்ப்பணித்த வேளை, தங்கள் பார்வையில் உயர்சாதியினராக கருதிக் கொள்ளும் நீங்கள், இனத்திற்கு எந்தவித நன்மையும் செய்யாமல், உங்கள் குடும்பமும் உங்கள் வாழ்வும் உங்கள் பதவியும் என்று இருந்துவிட்டு ஓய்வூதிய காலத்தில், தமிழரசுக் கட்சியால் அரசியலுக்கு கொண்டுவரப்பட்டு முதலமைச்சர் ஆக்கப்பட்டீர்கள். அந்நிலையில், உங்களுக்கு தமிழ் தேசிய கூட்டமைப்பு பெற்றுக்கொடுத்த வாக்குகளில், நீங்கள் குறிப்பிடும் உயர்சாதியினர் அல்லாத கீழ் சாதியினரின் வாக்குகள் இல்லாமல் அன்றைக்கு முதலமைச்சர் ஆகியிருக்க முடியுமா? நீங்கள் குறிப்பிடும் வெள்ளாளரின் 100 வீத வாக்கில், முதலமைச்சர் ஆகியதாகத்தான் நம்பிக் கொண்டிருந்தீர்களா?

கடந்த நாடாளுமன்றத் தேர்தலில் நீங்கள் குறிப்பிடும் வெள்ளாளரின் வாக்குகளை மட்டும் நீங்கள் பெற்றிருக்க ஒருபோதும் வாய்ப்பில்லை என்பதும் அது ஒருபோதும் முடியாது என்பதும் சிறு குழந்தைக்கும் தெரியுமல்லவா? தமிழ் தேசிய கூட்டமைப்பின் சறுக்கல்கள், கொள்கைசார் பிறழ்வுகள், தமிழ்த்தேசியத்தில் தாங்கள் உறுதி கொண்டதாக காட்டிக்கொண்ட தோற்றம், தலைவரைப் பற்றியும் மாவீரர்களைப் பற்றியும் நீங்கள் நேசிப்பதைப் போல காட்டிக் கொண்ட பேச்சுக்கள் ஆகியவற்றுக்காகவும் அளிக்கப்பட்ட வாக்குகளே அவை. தமிழ்தேசிய ஆர்வலர்களும் முன்னாள் போராளிகளும் உங்களுக்காக அளித்த வாக்குகள் அவை. அவர்களின் உழைப்பால் வந்த வாக்குகள் அவை. எல்லாவற்றையும் சாதி என்ற சீழ் படிந்த சிந்தனையால் நொருக்கிய உங்களையும் நீங்கள் செய்தது துரோகத்தையும் மாவீரர்கள் மன்னிப்பார்களா? ஒருபோதும் இல்லை. எங்கள் மண்ணுக்காக மடிந்துபோன பல்லாயிரம் மாவீரர்கள் சாதிமதம் பார்த்து தமது குருதியை மண்ணில் சிந்தவில்லை. ஒட்டுமொத்த தமிழ் இனத்தின் விடுதலைக்காகவே தம்மை விதையாக்கியவர்கள்.

அத்துடன் 2020இல் நாடாளுமன்றத் தேர்தலில், உங்களுடன் இணைந்து அரசியலில் செயற்பட்ட நீங்கள் குறிப்பிடும் வெள்ளாளர் அல்லாத சாதியினரின் ஆதரவாலும் வாக்குகளாலும் நாடாளுமன்ற உறுப்பினர் ஆக்கப்பட்டீர்கள். அப்படி எனில் உங்கள் பார்வையில் அத்தகைய சாதியினரின் வாக்குகள் வேண்டாம் என்று நாடாளுமன்ற உறுப்பினர் பதவியை இராஜினாமாச் செய்து வாக்குகளை பெற்றுத் தந்த அவர்களிடமே பதவியை கையளிப்பீர்களா?

நீங்கள் எனக்கு அனுப்பியுள்ள மின்னஞ்சலில் வரிக்குவரி சாதிப்பற்றையும் பாகுபாட்டையும் வெளிப்படுத்தியுள்ளீர்கள். அலுவலக பணியாளர்களிடம் சாதியை விசாரித்தமை, வெள்ளாளர் சாதி இல்லை என்று முடிவெடுத்தமை, வெள்ளாளர் சாதி உயர்ந்தது என்ற நம்பிக்கை என சாதித்சீழ் படிந்த சிந்தனையே தங்கள் 'மொத்த உருவம்' என்பதை எனக்கான பதிலில் இன்னும் தெளிவுபடுத்தி உள்ளீர்கள்.

''அவர் என்ன சாதியாக இருந்தாலும் அவர்மீது மரியாதை வைத்தே இருக்கிறேன்'' என ஐங்கரநேசனுக்கு எழுதியிருந்ததாக என்னிடம் தெரிவித்த பதிலிலும்கூட சாதியத்தின் உச்ச திமிரை வெளிப்படுத்தியுள்ளதுடன் 'நான் உயர்சாதிக்காரன், நீ கீழ் சாதிக்காரன் என்றாலும், உனக்கு மரியாதை தருவேன்'' என்பது போல் சாதி ஆணவத்தின் உச்சம் வெளிப்படுமாறு பதில் அளித்தும் உங்களை யாரெனக் காட்டியுள்ளீர்கள்.

மனப்பூர்வமாக சாதி பார்க்காதவராக தாங்கள் இருந்திருந்தால் ''நீங்கள் என்ன சாதி'' என்று கேட்டு ஒரு மின்னஞ்சலை அனுப்பியிருக்க மாட்டீர்கள். அதற்குப் பதிலாக உங்களிடம் சாதி தொடர்பில் கேட்ட உங்கள் உறவினர்களையும் நலன்விரும்பிகளையும் வாயடைக்கும் விதத்தில் பதில் அளித்திருப்பீர்கள். நீங்கள் எனக்களித்த பதிலில் கூட உயர்வென்றும் தாழ்வென்றும் நீங்கள் நம்பும் சாதிப்பாகுபாட்டை உறுதியாக நம்பி பதில் எழுதி உள்ளீர்கள். உங்கள் மனம் சாதிய சீழ் படிந்தது என்பதை மீண்டும் தெளிவாகவும் துல்லியமாகவும் வெளிப்படுத்தியுள்ளீர்கள்.

நான் அறிந்தவரையில், தாங்கள் கட்சி தொடங்கிய காலத்தில் தங்களுடன் இணைந்திருந்த, முக்கிய நபர்களாக அருந்தவபாலனும் ஐங்கரநேசனுமே இருந்தனர். அந்தச் சந்தர்ப்பத்தில் நீங்கள் கூறிக்கொள்ளும் நண்பர்கள் அல்லது நலன் விரும்பிகள், உங்களுக்குப் பின்பு இந்தக் கட்சியின் தலைமைத்துவத்தை குறைந்த சாதிக்காரனிடம் கையளிக்கப் போகிறீர்களா என்று தங்களிடம் கேட்ட பின்னரே, சாதிவிடயத்தை ஆராய்ந்துள்ளீர்கள். உங்களுக்கு சாதிபார்ப்பதில் உடன்பாடு இல்லை என்றால் இந்த விசாரணை செய்திருக்கமாட்டீர்கள் அல்லவா? ஒரு கட்சியின் தலைமைத்துவத்தையே இன்னொரு சாதிக்காரனிடம் கையளிக்க தயாராய் இல்லாத தலைமை, சிங்களவரிமிருந்து விடுதலை கேட்பது ஒட்டுமொத்த தமிழினத்திற்கானது அல்ல ஒரு சாதிக்கானதுதானே. ஒரு சாதியின் விடுதலைக்காக ஏன் ஒட்டுமொத்த இனமும் சிலுவை சுமக்க வேண்டும். சிங்களவரிடமிருந்து அடிமையாக இருப்பதற்கு பதிலாக தன் சொந்த இனத்தின் ஒரு பகுதியினரிடம் அடிமையாக இருக்கவா? சமூக விடுதலையுடன் கூடிய இனவிடுதலை இல்லை என்றால் அந்த இனவிடுதலையே தேவை இல்லை எங்கள் விடுதலைப் போராட்டமும் தமிழினத்தின் தேசியத் தலைமையும் எனக்குக் கற்றுத் தந்தது.

இனி நீங்கள் செய்ய வேண்டியது இதுதான் என்று கருதுகிறேன். நீங்கள், தமிழ் மக்கள் கூட்டணி என்ற கட்சியின் பெயரை மாற்றி "உயர்சாதிக் கூட்டணி" என்று மாற்றி உங்களை குறைந்த சாதியினருடன் சேரக்கூடாது என விமர்சித்த உறவுகள், நலன்விரும்பிகளை இணைத்து உங்கள் சாதிய அரசியலை செய்யுங்கள். அதனை விடுத்து, இனியும் தமிழ் தேசிய மூகமூடியை அணிந்துகொண்டு எமது மக்களை ஏமாற்ற வேண்டாம் என்பதனை வலியுறுத்துகின்றேன்.

கட்சி ஆரம்பித்தகாலத்தில் எங்கள் கட்சியில் அரசியல் அறிவுள்ள ஒரே ஒரு நபரான அருந்தவபாலன் அவர்களை ஒதுக்கி, அரசியல் பட்டறிவு இல்லாத சிலரை முன்னிறுத்தி தாங்கள் செய்த அரசியலின் சூட்சுமம் தற்போதுதான் எனக்கு புரிகிறது. உங்கள் பார்வையில் குறைந்த சாதியை சேர்ந்தவர் என்பதனாலேயே அருந்தவபாலனை ஒதுக்கினீர்கள் என்பதும் பட்டவர்த்தனமாகத் தெரிகிறது.

மாகாண சபை பதவிக் காலம் முடிந்து, கொழும்பு செல்ல இருந்த தங்கள் செலவுகளைப் பொறுப்பெடுத்து, யாழ்ப்பாணத்தில் தங்க வைக்க பணம் தந்தவர்கள் எந்த சாதியினர் என்று உங்கள் நலன்விரும்பிகள், உறவினர்கள் கேட்கவில்லையா? தமிழினத்தின் விடிவுக்காக குரல் கொடுப்பீர்கள் என்று நம்பி புலம்பெயர் தேசத்தில் இருந்து கோடிக் கணக்கான பணத்தை செலவு செய்து உங்களை நாடாளுமன்ற உறுப்பினர் ஆக்கிய வர்கள் எந்த சாதியினர் என்று உங்கள் நலன்விரும்பிகள், உறவினர்கள் கேட்கவில்லையா? அல்லது உங்கள் வெற்றிக்காக இரவுபகலாகத் தேர்தலில் பல்வேறு வேலைப்பளுக்களை சுமந்து உங்களை நாடாளுமன்ற உறுப்பினர் ஆக்கியவர்கள் எந்தச் சாதி என்று உங்கள் நலன்விரும்பிகள், உறவினர்கள் கேட்கவில்லையா?

உங்கள் பார்வையில் அவர்கள் கீழ் சாதியினர் என்றால் அவர்களிடம் இருந்து பணம் பெற்றிருக்கமாட்டீர்கள். அவர்களால் பதவிபெற்றிருக்கமாட்டீர்கள். சாதி பார்க்கும் உங்கள் நலன்விரும்பிகள் நண்பர்களிடமிருந்து பணத்தை பெற்று திருப்பிக் கொடுங்கள். உங்கள் பார்வையில் கீழ் சாதியால் வந்த பதவியையும் உடன் தூக்கி எறிந்து விட்டு மீண்டும் கொழும்புக்கு சென்றுவிடுங்கள்.

கடந்த நாடாளுமன்றத் தேர்தலுக்குப் பிறகு, உங்கள் அரசியலில் சில சறுக்கல்கள் இருந்தாலும் இருக்கும் தலைவர்களில் தீமை குறைந்தவர் என்று நம்பி, உங்களை ஆதரிக்கும் நிலையைக் கொண்டிருந்தேன். ஆனால் இந்த சாதிய விடயத்துடன் இருக்கும் அரசியல் தலைவர்களில் மிகவும் ஆபத்துக் கொண்டவர் தாங்கள் என்பதையும் உடன் அரசியலில் இருந்து அகற்றப்பட வேண்டியவரும் தாங்களே என்ற முடிவுக்கும் வந்துள்ளேன்.

மத்திய குழுவின் அனுமதியின்றி ரணிலுக்கு ஆதரவாகவும் உயர்த்தியமை, அமைச்சுப் பதவிகளுக்காக ரணில் தரப்புடன் ரகசியப் பேச்சுவார்த்தைகளில் ஈடுபட்டமை, வட மாகாண அரச உயர் அதிகாரிகளாக சிங்களவர்கள் வருவதை எதிர்த்துவிட்டு கட்சியின் நிறைவேற்று அலுவலராக சிங்களவரை நியமிக்க முயன்றமை போன்ற தங்கள் சறுக்கல்களை எல்லாம் விஞ்சிய வகையில் சாதியப்பாகு பார்த்தல், சாதித் திமிரோடு நடத்தல் முதலிய சறுக்கல்கள் இருக்கின்றன.

மிகப் பெரும் வலியும் கவலையும் கொள்ள வேண்டிய விடயம் என்னதெரியுமா? சிங்கள இனத்தில் சம்பந்தம் வைத்துக்கொள்ளும் தாராளவாதியான தாங்கள், சொந்த இனத்தில் சாதி பார்க்கும் உங்கள் பாகுபாட்டு மனநிலையை என்னவென்பது? அதுவும் மாபெரும் இனவழிப்பாலும் தோல்வியாலும் நொந்துபோன நிலையில் இருக்கும் இனத்தில் சாதி பார்த்து உங்கள் சுயலாப தன்முனைப்பு அரசியலை செய்வது எவ்வளவு அநீதியானது?

சர்ச்சைக்குரிய சாமியார் பிரேமானந்தாவை குருவாக ஏற்றுக்கொண்ட தாங்கள், கீழ்சாதி என பாகுபடுத்தவும் அதனை பெருமைப்படுத்திப் பேசவும் அருகதை கொண்டவரா? ''பிரேமானந்தா என்ற குற்றவாளியை ஏன் வணங்குகிறீர்கள்'' என்று செய்தியாளர் ஒருவர் கேட்டதற்கு, யேசுவை துணைக்கு அழைத்துப் பதில் அளித்த தாங்கள், சாதி பற்றி உங்கள் உறவினர்கள் கேட்ட போது சாதிப் பாகுபாடு பார்க்கக் கூடாது, அப்படி ஒன்று எமக்கு தேவையில்லை என்றல்லவா பதில் அளித்திருக்க வேண்டும்.

16 வயதில் ஒரு இளைஞன், சாதி, மதம் கடந்து ஒரு இனத்தை ஒன்றிணைத்து, மாபெரும் போராட்டத்தை நடாத்தி உலகின் கவனத்தை ஈர்த்து ஒப்பற்ற போராளியாய் தன் சரித்திரத்தை நிகழ்த்தியிருக்க, சாதிப்பாகுபாட்டை விதைத்து, அந்த இனத்தை சிதைத்து பின்னோக்கி இழுப்பது எவ்வளவு அநீதியானது? இனத்திற்காக குரல் கொடுப்பீர்கள் என்று பெரும் உழைப்பில் பெரும் முயற்சியில் வழங்கிய இந்த வாய்ப்பை பயன்படுத்தி, 'உண்ட வீட்டுக்கு இரண்டகம் செய்வதுபோல்' கேடுசெய்யும் நீங்கள் இச் செயலுக்காக பகிரங்க மன்னிப்புக் கேட்க வேண்டும்.

எனது சக்திக்கு மீறிய வகையில் என் கடுமையான உழைப்புக்களை இந்தக்கட்சிக்கும் உங்கள் நாடாளுமன்றத் தேர்தல் வெற்றிக்கும் வழங்கியுள்ளேன். என்றபோதும் இந்த விடயத்தின் பின்னர், தங்கள் தலைமையை ஏற்றுக்கொள்ள முடியாத நிலையில் மத்தியகுழு உறுப்பினர் பதவியில் இருந்தும் கிளிநொச்சி தொகுதி அமைப்பாளர் பதவியில் இருந்தும் உடனடியாக விலகுகிறேன். எனினும் உங்கள் காலத்தின் பின்பு, சரியான தலைமையின் கீழ் மீண்டும் இணைந்து பணியாற்றும் உறுதியான நம்பிக்கையில் எனது ஆயுட்கால உறுப்புரிமையில் இருந்து விலகாமல் இருக்கவும் தீர்மானித்துள்ளேன். ஆயினும் எனது விமர்சனங்களால் எரிச்சலுற்று, என்னை நீங்கள் கட்சியின் அடிப்படை உறுப்புரிமையில் இருந்தும் நீக்கலாம். அப்படி நடந்தால், தாங்கள் ஒரு மனசாட்சி இல்லாத ஜனநாயகத்தை மதிக்காத ஒருவர் என்பதும் வெளிப்பட்டு நிற்கும். அதை நினைத்து நான் வருந்தப் போவதுமில்லை.

'என்னை பின்பற்றாதே, என்கொள்கையைப் பின்பற்று" நான் கொள்கையில் இருந்து பிறழ்ந்தாலும் என்னை தண்டிக்கத் தயங்காதே' என்ற தேசியத் தலைவனின் வார்ப்புக்கள் ஒருபோதும் தனிமனிதனின் தவறுகளை நியாயப்படுத்தார்கள். பதவிக்காக கொள்கை வழி மாறியவர்களிடம் சரணாகதி அடையார்கள். நான் உட்பட பலர், தங்களுக்கு ஒரு கொள்கைவாதி என்ற ஒளிவட்டத்தைதந்து உயர்த்தி வைத்துள்ளோம். நான் ஒரு சாமானியன், இந்தக் கடிதத்தால் தங்களுக்கு பெரிதாக பாதிப்பு வராதென உங்களைப் போல் நானும் நம்புகிறேன். ஆயினும் கோலியாத்தை எதிர்த்த தாவீது போல நானும்''

வாழ்க்கையில் தாங்கள் மிக்க நலத்தோடும் நீண்ட ஆயுளோடும் வாழ வேண்டும் என்பதே என் விருப்பமும் பிரார்த்தனையும். ஆனால் தங்கள் அரசியல் ஆயுள் விரைவில் முடிவதே இனத்திற்கு நலமும் ஆயுளும் அளிக்கும்.

நன்றி, இவ்வண்ணம், தனபாலசிங்கம் சுதாகரன், கிளிநொச்சி தொகுதி அமைப்பாளர், மத்தியகுழு உறுப்பினர், தமிழ் மக்கள் கூட்டணி.

ஆழம் அறியாமல் காலை விடாதே என்று முன்னோர்கள் சும்மாவா சொன்னார்கள்!

**இடி மின்னல்**

## நீதி ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சந்தித்த பேராயர், உயிர்த்த ஞாயிறு தாக்குதலில் நீதி இன்னும் நிலைநாட்டப்படவில்லை என்று முறையிட்டார். தாங்கள் இருவரும் இந்தத் தாக்குதலின் பின்னால் உள்ள காரணங்கள் தொடர்பில் சுயாதீனமான, வெளிப்படையான விசாரணைகள் நடத்தப்படுவது குறித்துக் கலந்துரையாடினர் என்று ஆணையாளர் தனது கீச்சகப் (ருவிற்றர்) பக்கத்தில் தெரிவித்திருக்கிறார்.

2019 ஏப்ரலில் நடந்த உயிர்த்த ஞாயிறு தாக்குதலால் பாதிக்கப்பட்டவர்களுக்கான நீதி தேடும் சம்பியனான இலங்கைப் பேராயர் மல்கம் ரஞ்சித்தைச் சந்தித்ததை பெருமையாகக் கருதுகின்றேன் என்று ஆணையாளர் தனது பகிர்வில் தெரிவித்திருக்கிறார்.

2019 ஏப்ரல் 21 உயிர்த்த ஞாயிறு தினத்தில் (ஈஸ்டர்) கிறிஸ்தவ தேவாலயங்கள் மீதும் பன்னாட்டுச் சுற்றுலாவிகள் பயன்படுத்தும் சொகுசு விடுதிகளிலுமாக 8 இடங்களில் தொடர் குண்டு வெடிப்புக்கள் நிகழ்த்தப்பட்டன.

இவற்றில் 269 பேர் கொல்லப்பட்டனர். அவர்களில் 45 பேர் வெளிநாட்டு சுற்றுலாவிகள். மேலும் 500 பேர் காயமடைந்தனர். இந்தத் தாக்குதலை நடத்தியவர்கள் அனைவரும் குண்டுவெடிப்புக்களிலேயே கொல்லப்பட்டனர் என்றும் அவர்கள் தற்கொலையாளிகளாகத் தாக்குதலை நடத்தினர் என்றும் அதிகாரிகள் அறிவித்துள்ளனர்.

ஐஎஸ்ஐஎஸ் எனும் பயங்கரவாத அமைப்பின் கருத்தியல்களால் ஈர்க்கப்பட்ட, அவர்களுடன் தொடர்புகளைக்கொண்டிருந்த சக்ரான் தலைமையிலான இலங்கை தவ்கீத் ஜமாத் அமைப்பினரே இந்தத் தாக்குதலை நடத்தியதாகவும் விசாரணை அதிகாரிகள் நீதிமன்றத்தில் அறிக்கையிட்டுள்ளனர். இந்த அமைப்பினரோடு தொடர்புடையவர்கள், பயிற்சி பெற்றவர்கள் என்ற குற்றச்சாட்டில் ஏராளமானோர் கைது செய்யப்பட்டு விசாரணை செய்யப்பட்டனர். அவர்களில் பலர் இன்னும் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

இந்தத் தாக்குதல் குறித்து முன்கூட்டியே உளவுத் தகவல்கள் கிடைத்தபோதும் அதனைத் தடுக்க நடவடிக்கை எடுக்கத் தவறினார்கள் என்று முன்னாள் அரசுத் தலைவர் மைத்திரிபால சிறிசேன, அப்போதிருந்த பொலிஸ்மா அதிபர் ஆகியோரை பொறுப்பாளிகளாகக் கண்ட உயர் நீதிமன்றம் பாதிக்கப்பட்டவர்களுக்கு அவர்கள் இழப்பீடு வழங்கவேண்டும் என்று தீர்ப்பளித்துள்ளது.

இந்தப் பின்னணியில், தாக்குதல் நடத்தப்பட்டதற்குப் பின்னணியில் அரசியல் நோக்கங்கள் இருக்கின்றன என்று கருதப்படுவதால், அது குறித்து சுயாதீனமான, வெளிப்படையான வீசாரணை நடத்தப்படு உண்மைகள் அம்பலப்படுத்தப்படவேண்டும்

## இணையம் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சாதாரண முறைப்படி 2 வாரங்களுக்குள்ளேயா பெற்றுக்கொள்ள வேண்டும் எனக் குறிப்பிட வேண்டும்.

இந்தச் செயல்முறைக்குப் பிறகு, அவர்கள் தங்கள் அருகிலுள்ள பிரதேச செயலாளர் அலுவலகத்திற்குச் சென்று, தங்கள் கைவிரல் அடையாளத்தை வழங்கி ஒன்லைன் முறையின் மூலம் இலங்கை வங்கிக் கணக்கில் உரிய கட்டணத்தைச் செலுத்த வேண்டும்.

எவருக்கேனும் வீட்டில் இது தொடர்பான செயல்முறையை செய்ய முடியாதபட்சத்தில், அவர்கள் குடிவரவு மற்றும் குடியகல்வுத் திணைக்களத்தின் கீழ் அங்கீகரிக்கப்பட்ட புகைப்பட நிலையத்திற்குச் சென்று இதனைச் செய்து கொள்ளலாம்.

பிரதேச செயலகத்திற்குச் சென்று கைவிரல் அடையாளத்தை வழங்கிய பின்னர், எவருக்கேனும் உரிய கொடுப்பனவுகளை இணையத்தில் செலுத்த முடியாவிட்டால் அதற்கான மாற்று வசதிகளும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன. கைவிரல் அடையாளத்தை வழங்கிய பின்னர் பிரதேச செயலகத்தினால் ஒரு இலக்கம் வழங்கப்படும். அந்த இலக்கத்தை இலங்கை வங்கியில் சமர்ப்பித்தால், அதற்கான தொகையை இலங்கை வங்கி மதுதிணைக்களத்திற்கு பெற்றுக்கொடுக்கும்.

ஏற்கனவே 50 பிரதேச செயலகங்களில் கைவிரல் அடையாளத்தை பதியும் இயந்திரங்கள் மற்றும் கமராக்கள் பொருத்தப்பட்டுள்ளன, தபால் திணைக்களம் இந்த நடவடிக்கைகளுக்காக புதிய கூரியர் சேவையையும் அறிமுகப்படுத்தியுள்ளது.

கூரியர் முறையில் கடவுச்சீட்டை வீட்டிற்கு அனுப்பிவைத்தல் தொடர்பாக தபால் திணைக்களத்துடன் ஒப்பந்தம் ஒன்றும் கைச்சாத்திடப்பட்டுள்ளது. இந்த முறையின் படி 3 நாட்களில் கடவுச்சீட்டை உங்கள் வீட்டில் இருந்தே பெற்றுக்கொள்ள முடியும்.

கொழும்பு நகருக்குள் உள்ள விண்ணப்பதாரர்களுக்கு 2 நாட்களுக்குள் கடவுச்சீட்டை வீடுகளுக்குக் கையளிக்க முடியும் என தபால் திணைக்களம் எமக்கு அறிவித்துள்ளது. ஏனைய பிரதேச விண்ணப்பதாரர்கள் 3 நாட்களில் கடவுச்சீட்டை அவர்களது வீட்டில் பெற்றுக் கொள்வார்கள்.

முறைகேடுகளை தடுக்கவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதுடன், தற்போதுள்ள நவீன தொழில்நுட்பத்தை இச்செயல்முறைக்கு அதிகபட்சமாக பயன்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது - என்றார்..

## அமைச்சர.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பாதிக்கப்பட்டுள்ளன.

அம்பாறை மாவட்டத்தில் 65சதவீதமானவை தமிழ், முஸ்லிம் வாக்குகளாகும். வடக்கு, கிழக்கில் உள்ள எட்டு மாவட்டங்களில் அம்பாறையில் மட்டுமே மொட்டுக்கட்சி வெற்றியீட்டியுள்ளது.

அவ்வாறு செயற்பட்ட நான் தற்போது நாடாளுமன்றத்திற்கு சென்று தனியாக அமர்ந்திருக்க வேண்டிய எந்த சூழலும் இல்லை. அது பற்றி எனக்குப் பிரச்சினைகள் இல்லாது விட்டாலும், அமைச்சரவையில் சில முட்டாள்கள் உள்ளனர்.

அவ்வாறு முட்டாள்கள் நிறைந்த இடத்திற்குச் செல்வதற்கு நான் தயாரில்லை. அதற்காக நான் பிரார்த்தனை செய்கின்றேன். மொட்டின் கொள்கை என்னவென்று எனக்குத் தெரியும். அதனால் முட்டாள் ஆவதற்கு நான் தயாரில்லை. அடிமையாக இருப்பதற்கு நான் தயாரில்லை.

நாம் அமைத்த மொட்டுக் கட்சியின் மூலம் தான் பலர் நாடாளுமன்றத்திற்குச் சென்றுள்ளனர். நாங்கள் அமைத்த ஆட்சியில் பலர் நாடாளுமன்றம் சென்றுள்ளனர். ஆகவே மொட்டுக் கட்சியின் மாண்பினைப் பார்க்க வேண்டும். மொட்டின் கொள்கை என்னவென்று எனக்குத் தெரியும். ஆகவே அடிமையாக இருப்பதற்கு இயலாது. எமக்குரிய உரிமை மற்றும் மரியாதையை விட்டுக்கொடுக்க முடியாது.

அதேநேரம், கைப்பொம்மைகளாக, தாழ்த்தப்பட்டவர்களாக எம்மால் தொடர்ந்தும் செயற்பட முடியாது. காலத்தை வீணடித்து ஆளும் கட்சியில் இருப்பதில் கூட விருப்பமில்லைய - என்றார்.

# இனி எங்களால் போராடமுடியுமா என்பதுகூட எமக்குத் தெரியாது?

## காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள் தெரிவிப்பு

இனி எங்களால் போராட முடியுமா? என்பது கூட எமக்கு தெரியாமல் இருக்கின்றது என வவுனியாமாவட்டவலிந்து காணாமல் ஆக்கப்பட்ட உறவினர்களின் சங்கத்தின்செயலாளர்சி.ஜெனிற்றா தெரிவித்தார்.



வவுனியா பழைய பஸ் நிலையத்துக்கு முன்பாக நேற்று (செவ்வாய்க்கிழமை) இடம்பெற்ற போராட்டத்தின் பின்னர் ஊடகங்களுக்குக்கருத்துத்தெரிவித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

தொடர்ந்து கருத்து தெரிவித்த அவர் -

தொடர்ச்சியாக ஒவ்வொரு மாதமும் 30 ஆம் திகதி சர்வதேச நீதியை கோரி கவன ஈர்ப்பு போராட்டத்தை மேற்கொண்டு வருகின்றோம்.

உறவுகளை கடத்தி காணாமல் ஆக்கப்பட்டு, சரணடைந்து, கையில் ஒப்படைக்கப்பட்ட, எமது உறவுகளை தேடித்தான் நாம் ஜனநாயக போராட்டத்தை அஹிம்சை வழியில் 14 வருடங்களாகத் தொடர்ச்சியாக வீதியில் நின்று போராடிக் கொண்டிருக்கின்றோம்.

புதிய அரசாங்கம், பயங்கரவாதத் தடைச் சட்டத்தை எடுப்பதாக கூறி, புதிதாக பயங்கரவாத எதிர்ப்புத் தடைச் சட்டத்தை அமுல்படுத்த நினைக்கின்றார்கள்.

ஆனால் அதை செய்கின்ற போது எமது ஜனநாயக போராட்டத்துக்கான கருத்து சுதந்திரமோ , தனியாகவோ அல்லது கூட்டாகவோ சேர்ந்துபோராடுவதற்குபயங்கரவாத எதிர்ப்பு தடை சட்டம் ஒரு படிக்கல்லாக அமையும் என்பதற்காக நாடாளுமன்ற உறுப்பினர்களிடமும், ஏனையவர்களிடமும் நிறைவேற்றாது நிறுத்த வேண்டும் என்பதை ஊடக வாயிலாக கேட்டு கொள்கின்றோம்.

இலங்கை தேசத்து மக்கள் அழிக்கப்பட்டிருக்கின்ற போதும் கடத்திகாணாமல்ஆக்கப்பட்டஎமது உறவுகளுக்கும் எந்த ஒரு நீதியும் வழங்காமல் இந்த சர்வதேசம் பார்த்து கொண்டிருக்கின்றது. அதேபோன்று கடத்தி காணாமல் ஆக்கப்பட்டிருக்கின்ற உறவுகளை தேடிநீதிக்காகபோராடிக்கொண்டிருக்கின்ற போது இலங்கை தேசத்தை ஏன் கண்டுகொள்ளாமல் இருக்கின்றீர்கள்.


உறவுகள் இனியாவது மனிதர்களாக வாழ வேண்டும். ஏனையவர்களுடன் வாழ்வதற்கு உதவவேண்டும்என்பதற்காகநடக்க இருக்கின்ற கூட்டத் தொடரிலாவது சர்வதேசகுற்றவியல்நீதிமன்றத்தில் குற்றங்கள் இழைத்தவர்களை பாரப்படுத்தி மக்களுக்கான நீதியை பெற்றுத்தர வேண்டும் என்பதை நாம் மிகவும் பணிவாகக் கேட்டு நிற்கின்றோம். இனி எங்களால் போராட முடியுமா? என்பது கூட எமக்குத்தெரியாமல் இருக்கின்றது. ஏனென்றால்அச்சுறுத்தல்கள், தடை உத்தரவுகள் இருந்தன. தற்போது நீதிமன்ற வழக்குகள் கூட எமக்கு எதிராகத் தாக்கல் செய்யப்பட்டுக் கொண்டிருக்கின்றன. எனவே தொடர்ச்சியாக போராட சர்வதேசம் உறுதுணையாகஇருக்கவேண்டும் எனகேட்டுகொள்கிறேன். - என்றார். (05)

# மட்டக்களப்பில் பல கிராமங்களில் குரங்குகளின் தொல்லை அதிகரிப்பு

மட்டக்களப்பு மாவட்டம் மண்முனை தென் எருவில்பற்று பிரதேசத்திற்குட்பட்ட பல கிராமங்களில், குரங்குகளின் தொல்லைகள் அதிகரித்து வருகின்றன என அப்பகுதி மக்களும், விவசாயிகளும் கவலைதெரிவிக்கின்றனர்.

இரவில் மட்டக்களப்பு வாவி ஓரங்களில்அமைந்துள்ளபற்றைக் காடுகளில் தங்கி நிற்கும் குரங்குகள், பகல் வேளையானதும், கிராமங்களுக்குள்உட்புந்து, வீட்டுக் கூரைகளில் நடமாடித்திரிவமதால் ஓடுகள்உடைபடுகின்றன, இதுபோல் குடியிருப்புக்களில் அமைந்துள்ள மா, கொய்யா போன்ற பயன்தரும் மரங்களையும், பழவகைகளையும் சேதப்படுதி வருவதாக அப்பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர்.

இவ்வாறு மக்கள் குடியிருப்புக்களில் மாத்திரமின்றி கடற்கரை அண்டிய பகுதியில் மேற்கொள்ளப்பட்டுவரும் மிளகாய், கத்தரி, பயற்றை, வெங்காயம், போன்ற மேட்டுநிலப் பயிற்செய்கைகளையும் சேதப்படுத்தி வருவதாகவும் அப் பகுதி விவசாயிகள் தெரவிக்கின்றனர்.



எனவே கிராமங்களுக்குள் மாத்திரமின்றி, தமது வாழ்வாதாரத்துக்கும்பெரும்இடைஞ்சலாக இருந்துவரும் குரங்குகளைக் கட்டுப்படுத்துவதற்குசம்பந்தப்பட்ட அதிகாரிகள் உடன் நடவடிக்கை எடுக்கவேண்டும்எனஅப்பகுதிவாழ் மக்கள் தெரிவிக்கின்றனர். (05)

# மட்டக்களப்பில் போலி முகவர்கள்: விழிப்பாக இருக்குமாறு கோரிக்கை

## பொதுமக்களிடம் பொலிஸார் விடுப்பு

மட்டக்களப்பில் வெளிநாடுகளில் வேலைவாய்ப்பு பெற்று தருவதாக பலரிடம் பணங்களைப் பெற்றுஏமாற்றியஒருபோலிமுகவர் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர் என பொலிஸார் தெரிவித்தனர்.

பாதிக்கப்பட்ட4பேர்முறைப்பாடு செய்துள்ள நிலையில், சித்தாண்டியைச் சேர்ந்த போலி முகவர் ஒருவரே இவ்வாறு கைது செய்யப்பட்டு 14 நாள்கள் விளக்கமறியில் வைக்கப்பட் டுள்ளார்.

மேலும், 3 போலி முகவர்களைக் கைது செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

எனவே, பொதுமக்கள் வெளிநாடு செல்வதாக இருந்தால் மட்டக்களப்பு பொதுச் சந்தைக் கட்டடத்திலுள்ள அரசாங்க வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்தில் சென்று தெரிவித்தால் அவர்கள் உங்களுக்கு உதவி புரிவார்கள் என பொலிஸார் பொது மக்களிடம் கேட்டுக்கொண்டுள்ளனர். எனவே இந்த போலி வெளிநாட்டு முகவர்கள் தொடர்பாக பொதுமக்கள் விழிப்புடன் எச்சரிக்கையாகவும் விழிப்பாகவும் செயற்படுமாறு பொலிஸார் பொது மக்களைக் கேட்டுக் கொண்டுள்ளனர். (05)

# வங்கி அதிகாரியின் திருடப்பட்ட ஒரு கோடி ரூபா பெறுமதியான சொகுசு காருடன் இருவர் கைது!

வங்கி அதிகாரி ஒருவரின் சுமார் ஒருகோடிரூபாபெறுமதியானசொகுசு காரை திருடிய சந்தேக நபர்கள் இருவரை தலங்கம பொலிஸார் கைதுசெய்துள்ளனர்.

தலவத்துகொடையில் உள்ள வைத்திய நிலையத்தின் கார் தரிப்பிடத்தில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த வங்கி அதிகாரி ஒருவரின் காரே இவ்வாறு திருடப்பட்டுள்ளது.

திருடப்பட்ட கார், காரை திருட ஸ்கேன் செய்ய பயன்படுத்தப்பட்ட மென்பொருளுடன் கூடிய நவீன இயந்திரம், சந்தேகநபர்கள்திருடவந்த கார் மற்றும் சுமார் 2000 சிம் அட்டைகள் பொலிஸாரினால் கைப்பற்றப்பட்டுள்ளன.

கடந்த 27 ஆம் திகதி இரவு, வைத்திய நிலையத்திற்கு சிகிச்சைக்காகச்சென்றஅத்துருகிரியவைச் சேர்ந்த வங்கி அதி காரி ஒருவர், அங்குள்ளகார்நிறுத்துமிடத்தில்காரை நிறுத்திவிட்டு, சிகிச்சைக்காகச்சென்ற பின், கார்நிறுத்தியஇடத்துக்குதிரும்பி வந்து பார்த்தபோது அவரது காரை காணாததால்பொலிஸ்நிலையத்தில் முறைப்பாடளித்துள்ளார்.

இந்நிலையில், விசாரணைகளை மேற்கொண்ட பொலிஸார், காரை திருடிய இரு சந்தேகநபர்களைக் கைதுசெய்துள்ளதுடன் திருடப்பட்ட காரையும் மீட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (05)

# மைத்திரியின் சகோதரரின் ஒரு கோடி ரூபா பெறுமதியிலான நீலக்கல் மோதிரம் மாயம்!

முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபாலசிறிசேனவின்சகோதரரான சமிந்த சிறிசேனவின் கோடி ரூபா பெறுமதியான நீலக்கல் மோதிரம் காணாமல்போயுள்ளதாக பொலன்னறுவை பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.



ஒரு கோடிரூபாவுக்கும்அதிகம் பெறுமதியான சுமார் 6 பவுண் தங்க மோதிரம், ஐம்பது அமெரிக்க டொலர் மற்றும் ஒரு லட்சம் ரூபா ரொக்கப்பணம்திருடப்பட்டுள்ளதாக முன்னாள்ஜனாதிபதிமைத்திரிபால சிறிசேனவின் சகோதரரான சமிந்த சிறிசேனவால் இவ்வாறு முறைப்பாடு செய்யப்பட்டுள்ளதாக பொலன்னறுவை பொலிஸார் தெரிவித்தனர்.

பொலன்னறுவை, அதுமல்பிட்டிய பகுதியில் உள்ள வீடொன்றில் இருந்தே நீலக்கல் மோதிரம் மற்றும்பணம்திருடப்பட்டுள்ளதாக அவர் முறைப்பாடளித்துள்ளார் எனவும் பொலன்னறுவை பொலிஸார் தெரிவித்தனர்.

இது தொடர்பில் விசாரணைகளைமுன்னெடுத்துவரும்பொலன்னறுவை பொலிஸார், 6 பவுண் மோதிரம் மற்றும் பணத்தை திருடியவர்கள் யார் என்பது இது வரை உறுதிப்படுத்தப்படவில்லை எனத் தெரிவிக்கின்றனர். (05)

# நைஜீரியாவின் புதிய ஜனாதிபதியை சந்தித்தார் கென்யாவிலுள்ள இலங்கை உயர் ஸ்தானிகர்!

கென்யாவிலுள்ள இலங்கை உயர்ஸ்தானிகர் கணநாதன், நைஜீரியாவின் புதிய ஜனாதிபதியாக தெரிவுசெய்யப்பட்ட ஹிபோலோதின்புஇன்பதவியேற்பு விழாவில் கலந்துகொண்டார்.



நைஜீரியாவின்தலைநகரான அபுஜாவில் இந்த பதவியேற்பு நிகழ்வு 29 ஆம் திகதி திங்கட்கிழமை இடம்பெற்றது.

நைஜீரியாவின் 16 ஆவது ஜனாதிபதியாக அசிவாஜு போலா அஹமட் டினுபு பதவியேற்றுக் கொண்டார்.

இந்நிகழ்வில்கலந்துகொண்ட கென்யாவிலுள்ள இலங்கை உயர்ஸ்தானிகர் கணநாதன், இலங்கைக்கும்நைஜீரியாவுக்கும் இடையிலான இராஜதந்திர உறவுகள் முன்னொருபோதும் இல்லாத வகையில் வளர்ந்துள்ளதாக தெரிவித்தார். (05)

# பபாவின் பிரதான உதவியாளர் மைக்ரோ பிஸ்டலுடன் கைது!

ஒழுங்கமைக்கப்பட்ட குற்றவாளியும் பாரியளவிலான போதைப்பொருள் கடத்தல் காரருமான கலுஹத் நதீஷ் குமார அப்ரு எனும் 'பபா'வின் பிரதான உதவியாளராக செயற்படும் ஒருவரை விசேட அதிரடிப்படையினர் கைது செய்துள்ளனர்.

திங்கட்கிழமை அஹூங்கல்ல பொலிஸ் பிரிவிற்குட்பட்ட மருதானையில் அமைந்துள்ள வீட்டில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பின் போது குறித்த சந்தேகநபர் கைது செய்யப்பட்டுள்ளார்.

இதன்போது ஜேர்மனியில் தயாரிக்கப்பட்ட நவீனரக 08 மி.மி. மைக்ரோ பிஸ்டல், 01 தோட்டா மற்றும் 50 கிராம் ஹெரோயின் ஆகியன கைதான நபரிடமிருந்து கைப்பற்றப்பட்டுள்ளன.

சந்தேக நபர் அஹூங்கல்ல பிரதேசத்தை சேர்ந்த 40 வயதுடையவர் என ஆரம்பகட்ட விசாரணைகளில் இருந்து தகவல் வெளியாகியுள்ளது.

மேலதிக விசாரணைகளுக்காக சந்தேக நபர் அஹூங்கல்ல பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்மை குறிப்பிடத்தக்கது. (05)

# எரிவாயு விநியோகம் 10 ஆயிரம் சிலிண்டர்களினால் அதிகரிப்பு

## லிற்ரோ நிறுவனம் தெரிவிப்பு

எரிவாயுவிற்கான நாளாந்த கேள்வி அதிகரித்துள்ளமையால், தினசரி எரிவாயு விநியோகம் 10 ஆயிரம் சிலிண்டர்களால்அதிகரிக்கப்பட்டுள்ளதாக லிற்ரோ எரிவாயு நிறுவனத்தின் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.



இதன்படி, தினசரி எரிவாயுவிநியோகம்30ஆயிரத்தில் இருந்து 40 ஆயிரம் சிலிண்டர்கள் வரை அதிகரிக்கப்பட்டுள்ளதாக லிற்ரோ எரிவாயு நிறுவனத்தின் அதிகாரி மேலும் தெரிவித்தார்.

இந்நிலையில், எரிவாயு விநியோகத்தை அதிகரிக்க சப்புகஸ்கந்த மாபிம பிரதேசத்தில் புதிய எரிவாயு முனையம் ஒன்று உருவாக்கப்படவுள்ளதாகவும் அந்த அதிகாரி மேலும் தெரிவித்தார். (05)



# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: இல.551 A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com


## இன்றுதான் கடைசி நாள் மறந்துவிடாதீர்கள்

இந்த ஆண்டு வாக்காளர்களாகப் பதிவு செய்து கொள்வதற்கான இறுதி நாள் இன்று. இலங்கைத் தேர்தல்கள் ஆணையத்தின் அறிவிப்புப்படி வாக்காளர் பட்டியலைத் திருத்துவதற்கான விண்ணப்பங்களைச் சமர்ப்பிக்கவேண்டிய இறுதித் திகதி.

இந்தப் பதிவுகளை மேற்கொள்வதற்கு ஏற்கனவே போதிய – மாதக் கணக்கான – கால அவகாசம் வழங்கப்பட்டிருக்கின்றது. ஆனால், எதையும் கடைசி நேரத்தில் மட்டுமே செய்து பழக்கப்பட்ட எம்மில் பலர் அந்தக் கடைசிக் கணம் வரையில் காத்திருப்போம் என்பதால் இன்றுதான் அந்தக் கடைசி தினம் என்பதை ஞாபகப்படுத்த வேண்டியிருக்கின்றது.

ஒவ்வொரு கிராம அலுவலர் பிரிவிலும் வாக்காளர் விண்ணப்பப்படிவம் வீடு வீடாக கிராம அலுவலர்களால் நேரடியாகவோ அல்லது அவரது பிரதிநிதி மூலமாகவோ ஏற்கனவே விநியோகிக்கப்பட்டிருக்கும். அந்தப்படிவத்தை நிரப்பி வழங்கியிருக்காவிட்டால் உடனடியாக இன்றே அதனை வழங்கிவிடுங்கள். ஒருவேளை படிவமே கிடைக்கவில்லை என்றாலும் உடனடியாகக் கிராம அலுவலரைத் தொடர்பு கொண்டு படிவத்தைப் பெற்று அதனைப் பூர்த்தி செய்து வழங்கிவிடுங்கள். அப்படிச் செய்யாதபட்சத்தில் வாக்காளர் பட்டியலில் இருந்து உங்கள் பெயர் நீக்கப்படுவதற்கான வாய்ப்புக்கள் அதிகம்.

ஒவ்வொரு ஆண்டும் மாவட்டங்களில் பதிவு செய்யப்படும் வாக்காளர்களின் எண்ணிக்கையின் அடிப்படையிலேயே தேர்தல் தொகுதிகளுக்கான நாடாளுமன்ற உறுப்பினர்கள் எண்ணிக்கை ஒதுக்கீடு செய்யப்படுகின்றது. எனவே 18 வயதுக்கு மேற்பட்ட ஒவ்வொருவரும் தம்மை வாக்காளராகப் பதிவு செய்து கொள்வது அவசியம். ஆள் அடையாள அட்டைபோன்று ஒரு தடவை பதிவு செய்துவிட்டால் போதும் என்று எண்ணிவிடக்கூடாது. ஒவ்வொரு ஆண்டும் மீண்டும் மீண்டும் பதிவு செய்து வாக்காளராக இருப்பதை உறுதிப்படுத்திக்கொள்வதும் அவசியம். இல்லையேல் வாக்காளர் பட்டியலில் இருந்து நீக்கப்பட்டுவிடக்கூடும்.

கிராம அலுவலர் பதிவு இருக்கிறதுதானே, அவரே வாக்காளர் பதிவையும் உங்களுக்காகப் பார்த்துக்கொள்வார் என்று அசமந்தமாக இருக்காதீர்கள். நீங்கள் படிவத்தை நிரப்பிக் கொடுக்கவில்லை என்றால், கிராம அலுவலர் உங்களை மறந்து விடுவதற்கும் வாய்ப்புக்கள் உண்டு. முக்கியமாக இடம்விட்டு இடம்மாறி இருப்பவர்கள் தொடர்பில் இந்தக் கவனவீனங்கள் இடம்பெறலாம். குறிப்பாக கொழும்பு போன்ற வெளிமாவட்டங்களில் தேவை கருதி வசிப்போர் தமது சொந்த இடங்களில் வாக்காளர் பதிவை மேற்கொள்வது மிக முக்கியம்.

அதவும் தவிர இந்தியா அல்லது வேறு எந்த நாட்டில் அகதிக் கோரிக்கையோடு தஞ்சமடைந்தவர்கள் இருந்தாலும் அவர்களின் விவரங்களையும் வாக்காளர் பட்டியலில் பதிவு செய்துகொள்ள முடியும். அதனால் உங்கள் உறவினர்கள் அப்படியாராவது இருப்பின் அவர்களையும் பதிவு செய்வதற்கு உதவுங்கள்.

வாக்காளர் பதிவுகள் அடிப்படையிலேயே நாடாளுமன்ற உறுப்பினர்கள் எண்ணிக்கை தீர்மானிக்கப்படும் என்பதால், நீங்கள் பதியாமல் விடும்போது நாடாளுமன்றத்தில் உங்கள் உரிமைக்கான குரல்களின் எண்ணிக்கையும் குறையும். உரிமைகளைப் பெறுவதற்கான அழுத்தமும் குறையும். இவற்றையெல்லாம் கருத்தில் கொண்டு இன்றே வாக்காளர் பதிவுகளை மேற்கொண்டுவிட்டதை உறுதிப்படுத்துங்கள்.

# அருவக்காலு குப்பைகளை இறக்குதல், ஏற்றுதல் சேமிக்கும் செயற்பாடு அடுத்த வருடம் ஆரம்பம்!

## அமைச்சர் பிரசன்ன ரணதுங்க தகவல்



அருவக்காலுகுப்பைகளை இறக்குதல், குப்பைகளை ஏற்றுதல்மற்றும்குப்பைகளை சேமித்து வைக்கும் வசதி ஆகியவற்றின் செயற்பாடுகள் அடுத்தவருடம்ஆரம்பிக்கப்படும் என நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்புஅமைச்சர்பிரசன்ன ரணதுங்க தெரிவித்துள்ளார்.

இதன் கட்டுமானப் பணிகளை இந்த ஆண்டு இறுதிக்குள் முடிக்குமாறு அதிகாரிகளுக்கு அமைச்சர் உத்தரவிட்டார்.

நாளுக்குநாள் அதிகரித்து வரும் நகர திடக்கழிவு பிரச்சினைக்குத் தீர்வு காண, சுகாதாரமான குப்பை கிடங்கு வேண்டும்என்றநோக்கத்தில் இந்த குப்பை திட்டம் செயல்படுத்தப்படுகிறது. தற்போது நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சின் கீழ் அருவக்காலு குப்பைத் திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றது.

இதன்படி, கொழும்புநகரில் நாளாந்தம் சேகரிக்கப்படும் சுமார் 1200 மெற்றிக் தொன் குப்பைகளை களனி, வனவாசலையில் இருந்து சுமார் 170 கிலோமீற்றர் தொலைவில் அமைந்துள்ள புத்தளம், அருவக்காலுகுப்பைத் தளத்திற்கு ரயில் மூலம் கொண்டுசெல்வதுஇத்திட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்படும்.

அருவாக்கலுகுப்பைமேடு மற்றும்களனி, வனவாசாலை கழிவுப்பரிமாற்றநிலையங்கள் நிர்மாணிக்கப்பட்டு வருவதுடன், சீன நிறுவனமான சைனாஹார்பர்இன்ஜினியரிங் நிறுவனமும், சீனாவின் சவுத் வெஸ்ட் முனிசிபல் இன்ஜினியரிங் அண்ட் ரிஸேச் இன்ஸ்டிடியூட் ஒப் சைனா நிறுவனமும்அதன்கட்டுமானப் பணிகளை மேற்கொண்டு வருகின்றன.

இந்தக் கழிவுகள் அருவாக்கலு கழிவுநீர் மையத்தில் கொட்டப்பட்டு, அதன் பின், அருகில்உள்ளசுகாதாரக் குப்பை கிடங்கில் அப்புறப்படுத்தப்படுகிறது. நாளொன்றுக்கு அதிகபட்சமாக இரண்டு ரயில் பயணங்களை மேற்கொள்ள எதிர்பார்க்கப்படுவதாக அமைச்சர் பிரசன்ன ரணதுங்க தெரிவித்துள்ளார்.

திடக்கழிவுபோக்குவரத்து தொடங்கியவுடன், இந்த ரயில் பாதையில் போக்குவரத்து கடுமையாக இருக்கும். எனவே, புத்தளம் நூர் நகரில் இருந்து அருவாக்கலு வரை தற்போதுள்ளரயில்பாதையை மேம்படுத்த வேண்டிய தேவை இருப்பதாக அமைச்சர் பிரசன்ன ரணதுங்க வலியுறுத்தினார்.

அதற்காகநகர அபிவிருத்தி மற்றும்வீடமைப்பு அமைச்சும் போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சும் இணைந்து அமைச்சரவையில் அமைச்சரவைபத்திரத்தை சமர்ப்பித்துள்ளன.

செயற்பாட்டு நடவடிக்கைகளுக்காக அருவாக்கலுவில் புதியரயில்வே முற்றம் மற்றும் நடைமேடை மற்றும் புதிய கடவை அமைப்பதற்கும் இது தொடர்பான அமைச்சரவைபத்திரத்தில் முன்மொழியப்பட்டுள்ளது. அதற்காக 186,120,025.23 ரூபாவை ரயில்வேத் திணைக்களம் மதிப்பிட்டுள்ளது.

தற்போது ரயில்வேத் திணைக்களம் கொழும்பில் இருந்து நூர் நகர் வரை பயணிகள் ரயில்களை இயக்குவதோடு மற்றும் அதற்கு அப்பால் எந்த ரயில்களும் இயக்கப்படவில்லை. நூர் நகர் முதல் அருவக்காலு வரையிலான ரயில் பாதை, சியம் சிட்டி சிமென்ட் நிறுவனத்தால் பராமரிக்கப்படுகிறது. (05)

# இலங்கையின் இறைமை, சமூக பொருளாதார விருத்திக்கு சீனா எப்போதும் துணைநிற்கும்

## அந்த நாட்டு வெளிவிவகார பிரதி அமைச்சர் உறுதி



இலங்கையின் இறைமை, சமூக பொருளாதார அபிவிருத்திக்கு சீனா எப்போதும் துணைநிற்கும் என்று சீன வெளிவிவகார பிரதி அமைச்சர் உறுதியளித்துள்ளார்.

பிரதமர் தினேஸ் குணவர்தனவை நேற்று (செவ்வாய்க் கிழமை) அலரி மாளிகையில் சந்தித்த போதே அவர் இதனைத் தெரிவித்தார். விவசாயம், வர்த்தகம் மற்றும் துறைமுக உட்கட்டமைப்பு அபிவிருத்தி போன்ற பல துறைகளில் இலங்கையில் முதலீடுகளை அதிகரிக்க சீனா செயற்பட்டு வருவதாகவும் அவர் குறிப்பிட்டார்.

இலங்கையின் கடன் மறுசீரமைப்பு வேலைத் திட்டத்துக்கு சீனா தொடர்ந்தும் ஆதரவை அளித்து வருகிறது.



பல தரப்பினரின் அழுத்தங்களுக்கு மத்தியிலும் இலங்கை ஒரே கொள்கையைக் கடைப்பிடிப்பதாக பிரதியமைச்சர் பாராட்டு தெரிவித்தார். சமய உறவுகளை மேலும் மேம்படுத்தும் வகையில் இலங்கை பௌத்த சங்கங்களுடன் வலுவான ஒத்துழைப்பை ஏற்படுத்த சீனா நடவடிக்கை எடுத்துள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

இங்கு கருத்துத் தெரிவித்த பிரதமர் தினேஷ் குணவர்தன, பல்வேறு இயற்கை அனர்த்தங்களின் போது சீனா வழங்கிய உதவியை பாராட்டினார். தற்போதைய பொருளாதார நெருக்கடியிலிருந்து மீள்வதற்கான இலங்கையின் முயற்சிகளுக்கு வழங்கப்பட்ட ஆதரவுக்கும் பிரதமர் பாராட்டு தெரிவித்தார். கொவிட் தொற்றுநோய்களின் போது இலங்கைக்கு தடுப்பூசிகள் மற்றும் மருத்துவ உதவிகள் உள்ளிட்ட மனிதாபிமான உதவிகளை சீனா வழங்கியதையும் பிரதமர் நினைவு கூர்ந்தார்.

சீனாவின் யுனான் மாகாண ஆளுநரின் அண்மைய விஜயத்தைப் பற்றிக் குறிப்பிட்ட பிரதமர், இந்தப் பயணத்தின் போது மேற்கொள்ளப்பட்ட பயனுள்ள கலந்துரையாடல்கள் விவசாயத் துறையில் ஒத்துழைப்பை அதிகரிக்கும் என்று நம்பிக்கை தெரிவித்தார்.

மல்வத்துஓயா திட்டத்தின் கீழ் நீர்ப்பாசனம் பெறும் பிரதேசங்களில் விவசாயத் திட்டங்களில் சீனா முதலீடு செய்யமுடியும் எனவும், சீனாவிற்கு மரக்கறி மற்றும் பழப் பொருள்களை ஏற்றுமதி செய்யமுடியும் எனவும் பிரதமர் சுட்டிக்காட்டினார்.

சீன பிரதி அமைச்சர் பத்தாயிரம் பாடசாலை பைகள், காகிதாதிகள், சீருடைகள் மற்றும் பாடசாலை மாணவர்களுக்கான அத்தியாவசியப் பொருள்களையும் வழங்கி வைத்தார். சுற்றாடல் அமைச்சர் நசீர் அஹமட், பிரதி சபாநாயகர் அஜித் ராஜபக்ஷ, இலங்கைக்கான சீனத் தூதுவர் கியு ஷென் ஹொங் மற்றும் சீன வெளிவிவகார அமைச்சின் அதிகாரிகள் பலரும் இந்நிகழ்வில் கலந்து கொண்டனர். (05)

## வீதி .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சாவடைந்துள்ளார். மோட்டார் சைக்கிளைச்செலுத்திச்சென்ற 28 வயதான இளைஞரே உயிரிழந்துள்ளார்.

அநுராதபுரம் - ஸ்வஸ்திபுர பகுதியில் வான் விபத் துக்குள்ளானதில் 76 வயதான பெண் ஒருவர் உயிரிழந்துள்ளார். இந்த விபத்தில் பெண் ஒருவரும், ஆண் ஒருவரும், இரண்டு சிறுவர்களும் காயமடைந்துள்ளனர்.

களுத்துறை - பாணந்துறையில் ஓட்டோ கவிழ்ந்ததில் இருவர் சாவடைந்துள்ளனர். 33 வயதான ஓட்டோ சாரதியும், அதில் பயணித்த 41 வயதான பெண் ஒருவருமே உயிரிழந்துள்ளனர்.

மொனராகலை - வெல்லவாயவில் ஹயஸ் வான் மோதியதில் பாதசாரி ஒருவர் சாவடைந்துள்ளார். 72 வயதான வயோதிபரே உயிரிழந்துள்ளார். (02)

## நாட்டை .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

குறிப்பிடப்பட்டுள்ளது. மக்கள் மத்தியில் பிளவுகளை ஏற்படுத்தும் வகையில் கருத்துக்களை வெளியிடுவதற்கு எவருக்கும் உரிமை இல்லை.

சமூக வலைத்தளங்களைச் சமூகத்தின் நலனுக்காகவே பயன்படுத்தப்படவேண்டும். ஆனால் சமூக வலைத்தளங்களின் செயற்பாடுகள் தற்போது வேறு நோக்கங்களைக் கொண்டுள்ளதாகக் கூறப்படுகின்றது. இதனால்தான் சமூகத்தில் பெரும் பிரச்சினைகள் பெருமளவில் ஏற்பட்டுள்ளன. எனவே அழிவுகளை ஏற்படுத்தும் செயற்பாடுகளை முழுமையாக நிறுத்துமாறு தயவாகக் கேட்டுக் கொள்கின்றேன்.

அதேநேரம், ஆட்சி மாற்றத்தினை மையப்படுத்தி இந்த நிகழ்வுகள் அரங்கேற்றப்படுவதை உறுதியாகக் கூறமுடியாதுள்ளது. அது தொடர்பிரல்வசிசாரணைகள் முன்னெடுக்கப்படுகின்றன.

## அமைதியைக் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அமைதியான சூழ்நிலையை சீர்குலைக்க பல தரப்பினர் முயற்சித்து வருகின்றனர். ஆரோக்கியமான சமூகமொன்றுக்கு மத உறுதிப்பாட்டடைப் பேணுவதும் அவசியமாகும்.

தனி நபர் ஒருவரோ அல்லது குழுவினரோ மதவாத உணர்வுகளைத் தூண்டுவதற்கு அல்லது அந்த நோக்கத்துடன் செயல்பட முயற்சித்தால் அவர்களுக்கெதிராக, அரசமைப்பின் 9ஆவது சரத்து மற்றும் தண்டனைச் சட்டக் கோவையின் 291 (அ), (ஆ) பிரிவுகளின் கீழ் கடுமையாகச் சட்டத்தை அமுல்படுத்த தயங்கப் போவதில்லை - என்றுள்ளது.

## கிழக்கு ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கூடத்தில் இந்தக் கூட்டம் இடம்பெற்றது.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அண்மையில் நகர அபிவிருத்தி அதிகார சபையின் அதிகாரிகளுடன் நடத்திய கலந்துரையாடலில் கிழக்கு பெருநகர அபிவிருத்தி திட்டத்தை உடனடியாக நடைமுறைப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்குமாறு பணிப்புரை விடுத்திருந்தார். அதன்படி, இது தொடர்பாகக் கலந்துரையாடுவதற்காக நகர அபிவிருத்திமற்றும்வீடமைப்பு அமைச்சர்பிரசன்னரணதுங்க இந்தக் கூட்டத்திற்கு அழைப்பு விடுத்திருந்தார்.

இது தொடர்பில் அமைச்சின் ஊடகக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது: நகர அபிவிருத்தி அதிகார சபையின் ஆலோசனையின் பேரில் சிங்கப்பூரின் நகர வடிவமைப்பு நிறுவனம் கிழக்குப் பெருநகர வளர்ச்சித் திட்டத்தைத் தயாரித்து வருகிறது. இதன்போது முதற்கட்ட பணிகள் தொடங்கப்பட்டுள்ளன. திருகோணமலை,

மட்டக்களப்பு மற்றும் அம்பாறை ஆகிய 3 மாவட்டங்களுக்கும்இத்திட்டம் தயாரிக்கப்படும். இதன் கீழ் இந்த மாவட்டங்கள் பொருளாதார, வர்த்தக, கலாச்சார மற்றும் சுற்றாடல் ரீதியாக அபிவிருத்தி செய்யப்படும்.

இங்கு, நாடு பொருளாதார நெருக்கடியை எதிர்நோக்கியுள்ளதாகவும், எனவே தற்போதைய பொருளாதார நிலைமைக்கு ஏற்ப இந்த அபிவிருத்தித் திட்டம்

வடிவமைக்கப்படவேண்டும் எனவும் அமைச்சர் ஆலோசனை வழங்கினார். அதன் மீளாய்வு நடவடிக்கைகள் நிறைவடைந்த பின்னர், செயல்திட்டம்தயாரிக்கப்படும். பின்னர்நகர அபிவிருத்தி அதிகாரசபை இந்த அபிவிருத்தித் திட்டத்தை வர்த்தமானி மூலம் வெளியிடும்.

கிழக்குப் பெருநகர அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் திருகோணமலை மாவட்டத்தின் குச்சவெளி மற்றும் நிலாவெளி பகுதிகள் கடல் மற்றும் சூழல் சுற்றுலா வலயங்களாகவும், மட்டக்களப்பு மாவட்டத்தின் வெருகல் மற்றும் பாசிக்குடா பகுதிகள் மீன்பிடி மற்றும் சுற்றுலா வலயங்களாகவும், அம்பாறை மாவட்டத்தில் கோமாரி முதல் பானம வரையான பகுதிகள் கடலோர சுற்றுச்சூழல் சுற்றுலா வலயங்களாகவும் அபிவிருத்தி செய்யப்படவுள்ளன. அத்துடன் கிண்ணியா மீன்பிடி கைத்தொழில் நகரமாகவும்இ புல்மோட்டை நகரம் கனிம கைத்தொழில்

நகரமாகவும், மூதூர் நகரம் பசுமை சக்தி நகரமாகவும் அபிவிருத்தி செய்யப்படும்.

நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சின் செயலாளர் டபிள்யூ.எஸ். சத்யானந்தா, மேலதிகச் செயலாளர் (வீடமைப்பு) டபிள்யூ.எம். ஆனந்த, உதவிச் செயலாளர் (நகர அபிவிருத்தி) டபிள்யூ.பி.யு. காவிந்த்யா, நகர அபிவிருத்தி அதிகாரசபையின் தலைவர் நிமேஷ் ஹேரத், பணிப்பாளர் நாயகம் பிரசாத் ரணவீர, பிரதிப் பணிப்பாளர் நாயகம் (திட்டமிடல் வலயம் 2) லலித் விஜயரத்ன மற்றும் பலர் இந்நிகழ்வில் கலந்துகொண்டனர் - என்றுள்ளது.

## சீன ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இடையிலான 12ஆவது சுற்று இராஜதந்திர ஆலோசனைகளுக்கு இணைத் தலைமை வகிப்பதற்கு இலங்கைக்கு வருகை தந்துள்ள சீனாவின் பிரதி அயலுறவுத் துறை அமைச்சர் சன் வெய்டாங் உள்ளிட்ட தூதுக்குழுவினர் நேற்று எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாசவைச் சந்தித்து இது தொடர்பில் பேசினர்.

இருநாடுகளுக்கும் இடையில் நிலவி வரும் உறவுகளை மேலும் வலுப்படுத்துவது குறித்து இங்கு விசேட கவனம் செலுத்தப்பட்டுள்ளதோடு, இலங்கையின் பொருளாதார அபிவிருத்திக்குத் தேவையான ஒத்துழைப்பை வழங்குமாறும், உற்பத்தித் தொழில் புரட்சியை அடுத்த கட்டத்திற்கு முன்கொண்டு செல்வதற்குத் தேவையான ஒத்துழைப்பை நல்குமாறும் எதிர்க்கட்சித் தலைவர் இதன்போது கோரிக்கை விடுத்துள்ளார்.

சீனப் பொருளாதாரப் புரட்சி தொடர்பாகக் கவனம் செலுத்தப்பட்டதுடன், பிராந்திய அமைதிமற்றும்நல்லிணக்கம் தொடர்பாகவும் இங்கு கலந்துரையாடப்பட்டன.

இந்நிலையிலேயே பிராந்திய அமைதி மற்றும் நல்லிணக்கம் போலவே உறுதிப்பாட்டைவலுப்படுத்தும் சர்வதேச உறவுகளை கட்டியெழுப்புவதுதொடர்பிலும் எதிர்க்கட்சித் தலைவருக்கும் சீன பிரதி அயலுறவுத்துறை அமைச்சருக்கும்இடையிலான கலந்துரையாடலில் கவனம் செலுத்தப்பட்டது.

## தாயும்.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பொலிஸார், 28 வயதுடைய இளைஞர் ஒருவரைச் சந்தேகத்தில் நேற்றிரவு கைது செய்துள்ளனர்.

கொலைச் சந்தேகநபர் போதைப்பொருள்பாவனைக்கு அடிமையானவர் என்று பொலிஸ் விசாரணையில் தெரியவந்துள்ளது. (02).

## ரஜினியின் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

டி. வெங்கடேஸ்வரன் இந்த வாரம் அவரது இல்லத்தில் சந்தித்ததாக இலங்கையின் அயலுறவு அமைச்சகம் தெரிவித்துள்ளது.

சந்திப்பின் போது, ரஜினிகாந்தை இலங்கைக்கு வருமாறு துணை உயர்ஸ்தானிகர் அழைப்பு விடுத்தார்.

அவருடைய வருகை சினிமா மற்றும் சுற்றுலாத் துறையை மேம்படுத்தும் என்று வெங்கடேஸ்வரன் கூறியுள்ளார். (02)

## ஆளுநரின்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பெற்றது.

அந்த வகையில் காரைதீவு விவசாய போதனாசிரியர் காரியாலயத்தில் பிரதேச விவசாய போதனாசிரியர் சஜிகலா ரகுநந்தன் தலைமையில் மரநடுகை இடம் பெற்றது.

தொழில்நுட்ப உதவியாளர் திருமதி வி.நிலக்ஷி பங்குபற்றுதலுடன் மரநடுகை வெற்றிகரமாக இடம் பெற்றது.







OKAYA
ELECTRIC VEHICLES
dsl
பெட்ரோல் பைக்குகளை பயன்படுத்துவதை
விட 77% இலாபமான பாவனைக்கு
The inEVitable
Future of Smart Mobility
FAAST-F4
140-160 KM ஒருமுறை* சார்ஜ் செய்தால்
FAAST-F2T
80-85 KM ஒருமுறை* சார்ஜ் செய்தால்
FREEDOM
70-75 KM ஒருமுறை* சார்ஜ் செய்தால்
Rs.550,000/- இருந்து
இந்தியாவில் அதி வேகமாக
விற்பனையாகும் மின்சார வாகனம்
2 வருட உத்தரவாதம்
3 இலவச சேவைகள்
Visit DSL EV Experience Center : # 525, Union Place Colombo 02
Hotline - 070 300 9555

காலைக்கதிர் Kalaikkathir

# கல்முனையில் இருந்து தேசிய, மாகாண மட்டங்களில் சாதித்தவர்களை கௌரவித்த 'வர்ண இரவு' நிகழ்வு

கல்முனை வலயப் பாடசாலைகளிலிருந்து தேசிய மற்றும் மாகாண மட்டங்களில் விளையாட்டுத்துறையில் சாதித்த வீரர்களைப் பாராட்டி கௌரவிக்கும் 'வர்ண இரவு' நிகழ்வு வரலாற்றில் முதன்முறையாக நிந்தவூர் அல்-அஸ்ரக் தேசிய பாடசாலை காஸிமி மண்டபத்தில் கல்முனை கல்வி வலய உடற்கல்விக்கு பொறுப்பான உதவிக்கல்வி பணிப்பாளர் யூ.எல்.எம். சாஜித் தலைமையில் நடைபெற்றது.




இந்நிகழ்வில் கல்முனை வலயக்கல்விபணிப்பாளர் எம்.எஸ். சஹுதுல் நஜீம் பிரதம அதிதியாக கலந்து கொண்டு வீரர்களை கௌரவித்தார். இந்நிகழ்வில் மேலும் கல்முனை கல்வி மாவட்ட



பொறியியலாளர் ஏ.எம். ஸாஹிர், கல்முனை வலயக்கல்வி அலுவலக கணக்காளர் வை. ஹபீபுல்லாஹ், பிரதிக்கல்வி பணிப்பாளர்களான எம்.எச். ஜாபீர், எம்.எச்.றியாஸா, பீ. ஜிஹானா ஆலிப், என். வரணியா, ஏ.எச்.பௌஸ், உதவிக்கல்வி பணிப்பாளரும், சாய்ந்தமருது கோட்டக்கல்வி அதிகாரியுமான என்.எம்.ஏ. மலிக், உதவிக்கல்வி பணிப்பாளரும், கல்முனை கோட்டக்கல்வி அதிகாரியுமான ஏ.பி. பாத்திமா நஸ்மியா சனூஸ், உதவிக்கல்வி பணிப்பாளர் ஏ. அஸ்மா மலிக், என். சஞ்சீவன், நிந்தவூர் கோட்டக்கல்வி அதிகாரி எம். சரிபுதீன் உட்பட வலயக்கல்வி அலுவலக அனைத்து பதவி நிலை உத்தியோகத்தர்கள், ஆசிரிய ஆலோசகர்கள், பாடசாலை அதிபர்கள், ஆசிரியர்கள், விளையாட்டு பயிற்றுவிப்பாளர் எனப்பலரும் கலந்து கொண்டனர்.

தேசிய மற்றும் மாகாண மட்டங்களில் விளையாட்டுத் துறையில் சாதித்த கல்முனை வலய பாடசாலைகளின் 300 இற்கும் மேற்பட்ட வீரர்களை பாராட்டி கௌரவித்த 'வர்ண இரவு' நிகழ்வில் சாதனைக்கு துணையாக நின்றவர்கள், அண்மையில் ஓய்வுபெற்ற உடற்கல்வி ஆசிரிய ஆலோசகர் ஐ.எல்.எம். இப்ராஹிம் உட்பட பலரும் பொன்னாடை போர்த்தி நினைவுச்சின்னம் வழங்கப்பட்டு கௌரவிக்கப்பட்டார்கள். (05)

# சமூக ஊடகங்கள் மூலம் இனங்களுக்கு இடையில் பதற்றத்தை ஏற்படுத்தச் சதி

## அமைச்சர் பந்துல கூறுகிறார்

சமூக ஊடகங்கள் மூலம் இனங்களுக்கு இடையில் பதற்றத்தை ஏற்படுத்த பல்வேறு குழுக்கள் மிகவும் ஒழுங்கமைக்கப்பட்ட நிகழ்ச்சி நிரலை முன்னெடுத்து வருகின்றன எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பாகத் தேசிய பாதுகாப்புச் சபைக்கு அண்மையில் தெரிவிக்கப்பட்டதாக அமைச்சரவைப் பேச்சாளர், அமைச்சர் பந்துல குணவர்தன நேற்று (செவ்வாய்க்கிழமை) தெரிவித்தார்.

அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் ஊடக சந்திப்பில் பேசிய அவர், ஈஸ்டர் ஞாயிறு தாக்குதலில் இருந்து அரசாங்கம் பாடம் கற்றுக்கொண்டதாகக் குறிப்பிட்டுள்ளார்.

ஆகவே இவ்வாறான செயற்பாடுகளுக்கு தீர்வு காணத் தேவையான நடவடிக்கைகளை அரசாங்கம் எடுக்கும் என்றும் பந்துல குணவர்தன கூறினார்.

மேலும் அப்பாவி மக்களுக்கு இடையூறு விளைவிக்கும் எந்தவொரு நிகழ்வுக்கும் அல்லது சம்பவத்துக்கும் அரசாங்கம் இடமளிக்காது என்றும் குறிப்பிட்டார். (05)

# முஸ்லிங்களின் பிரச்சினைகள் மற்றும் கல்முனை விவகாரம் குறித்து கூட்டம்

இலங்கை முஸ்லிங்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் அதிலும் குறிப்பாக கல்முனை பிரதேச செயலக விவகாரம் தொடர்பில் முன்னெடுக்கப்படும் வேலைத்திட்டங்களை மக்களுக்கு முன்வைத்தலுக்காகவும் எதிர்கால வேலைத்திட்டங்கள் தொடர்பிலுமான கலந்துரையாடல் ஒன்று கல்முனை உரிமைக்கான மக்கள் அமைப்பின் ஏற்பாட்டில் சமாதான கற்கைகளுக்கான நிறுவன பணிப்பாளர் பேராசிரியர் எஸ்.எல்.றியாஸ் தலைமையில் திங்கட்கிழமை இரவு கல்முனை தனியார் மண்டபத்தில் நடைபெற்றது.



இந் நிகழ்வில் முன்னாள் இராஜாங்க அமைச்சரும்,



நாடாளுமன்ற உறுப்பினருமான சட்டத்தரணி எச்.எம்.எம். ஹரீஸ், கல்முனை மாநகரசபை முன்னாள் உறுப்பினர் ஏ. கலீலுர் ரஹ்மான் ஆகியோர் மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் தொடுக்கப்பட்டுள்ள கல்முனை விவகாரத்தில் இடையீட்டு மனுதாரர்களாக தாங்கள் செல்லவேண்டிய அவசியம் குறித்தும், அந்த வழக்கில் முஸ்லிங்களுக்கு இருந்த ஆபத்து தொடர்பிலும் மக்களுக்கு விளக்கமளித்தனர்.

கல்முனை முஹைத்தீன் ஜும்மா பள்ளிவாசல் தலைவர் டாக்டர் எஸ்.எம்.ஏ அஸீஸ், அரசியல்துறை பேராசிரியரும், தென் கிழக்கு பல்கலைக்கழக கலை கலாச்சாரபீடாதிபதியான எம்.எம்.பாஸீல் ஆகியோர் முஸ்லிங்களின் சமகால பிரச்சினைகள் தொடர்பிலும், கல்முனை விவகாரம் தொடர்பிலும் முஸ்லிங்களின் நிலைப்பாடுகள் தொடர்பிலும், அரசியல்வாதிகளும், சிவில் அமைப்புக்களும் முன்னெடுக்கவேண்டிய பணிகள் தொடர்பிலும் பேசினர். இந்தக் கலந்துரையாடலில் உலமாக்கள், தென் கிழக்கு பல்கலைக்கழக பல்கலைக்கழக சீரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி எம்.பி.எம் இர்சாத், வீதி அபிவிருத்தி அதிகாரசபை நிறைவேற்று பொறியியலாளர் இஸட்.ஏ. அஸ்மீர், சட்டமாணவன் எம்.வை.எம்.வை. இம்ரான், கல்முனை மாநகர சபை பொறியியலாளர் ஏ.ஜே ஜௌஸி, முன்னாள் மாநகர சபை உறுப்பினர்கள், சிவில் அமைப்புக்களின் பிரதானிகள், வர்த்தகர்கள், சமூக, அரசியல் செயற்பாட்டாளர்கள் எனப்பலரும் கலந்து கொண்டனர். இந்த கலந்துரையாடலின் போது முஸ்லிம் சமூகத்தின் கடந்த கால வரலாறுகள் மீட்கப்பட்டதுடன், எதிர்கால விடயங்கள் தொடர்பிலும் பேசப்பட்டன. (05)

# திராய்க்கேணி பாடசாலை மாணவர்களுக்கு இணைந்த கரங்களால் கற்றல் உபகரணம்

இணைந்த கரங்கள் அமைப்பால், கமு/திகோ/திராய்கேணி அரசினர் தமிழ் கலவன் பாடசாலையில் கல்வி கற்கும் பாடசாலை மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்கள் மற்றும் புத்தகப்பை என்பன வழங்கும் நிகழ்வு நேற்று (செவ்வாய்க்கிழமை) ஆசிரியர் ஏ.எல்.பத்திமா சிபா தலைமையில் இடம்பெற்றது.






திருக்கோவில் கல்விவலயத்தில் உள்ள பாடசாலைகளில் அதிகஷ்ட தொழில் வாய்ப்பற்று வாழும் குடும்ப மாணவர்கள் கல்வி கற்கும் கமு/திகோ/திராய்கேணி அரசினர் தமிழ் கலவன் பாடசாலையில் கல்வி கற்கும் 40 மாணவர்களுக்கு இணைந்த கரங்கள் அமைப்பால் கற்றல் உபகரணங்கள் மற்றும் புத்தகப்பைகள் என்பன வழங்கி வைக்கப்பட்டன.

இந்நிகழ்வில் பாடசாலையின் ஆசிரியர்களான கே. விஜிதரன், திருமதி ந. பவாணி ஆகியோரும் இணைந்த கரங்கள் அமைப்பின் உறுப்பினர்களான லோ.கஜரூபன், எஸ்.காந்தன், சி.துலக்சன், என்.லிரோஸ்காந்த், கே.ஜெயந்தன், எஸ்.சிருஸ்காந்த், ட.தஜன் ஆகியோர் கலந்துகொண்டு மாணவர்களுக்கான கற்றல் உபகரணங்கள் வழங்கி வைத்தனர். (05)

# கொழும்பு இலகு ரயில் போக்குவரத்துத் திட்டத்தை மீண்டும் ஆரம்பிக்க அமைச்சரவை பச்சைக் கொடி!

ஜப்பானிய அரசாங்கத்தின் ஆதரவுடன் கூட்டாகச் செயற்படுத்தப்படவிருந்த கொழும்பு இலகு ரயில் போக்குவரத் திட்டத்தை மீண்டும் ஆரம்பிப்பதற்கான கலந்துரையாடலை ஆரம்பிப்பதற்கு அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது.



அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் ஊடக சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவித்த போதே அமைச்சர் பந்துல குணவர்தன இதனைத் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் -

'ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க கடந்த வாரம் ஜப்பானுக்கு விஜயம் செய்வதற்கு முன்னர், சர்வதேச சமூகத்துடனான இலங்கையின் நம்பகத்தன்மையை மீட்டெடுக்கும் முயற்சியில், இந்தத் திட்டத்தை மீள ஆரம்பிக்கும் தீர்மானம் எடுக்கப்பட்டது.

சமீபகாலங்களில், நெருக்கடியால் பாதிக்கப்பட்டுள்ள இலங்கைக்கு உதவிகளை வழங்கும் முன்னணி நாடுகளில் ஒன்றாக ஜப்பான் திகழ்கிறது, எனினும், சில திட்டங்கள் மற்றும் முன்மொழிவுகளை நிறுத்தியதன் மூலம் இருநாடுகளுக்கிடையிலான இருதரப்பு உறவுகளில் விரிசல் ஏற்பட்டது.

தொடர்ந்து, இலங்கை - ஜப்பான் இருதரப்பு உறவுகளில் ஏற்பட்டுள்ள இந்த சரிவை சரி செய்யும் நோக்கில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் ஜப்பானுக்கான விஜயம் அமைந்திருந்தது.

டோக்கியோவுக்குப் புறப்படுவதற்கு முன்னர், கொழும்பு இலகு ரயில் போக்குவரத் திட்டத்தை மீண்டும் ஆரம்பிப்பதற்கு அமைச்சரவையின் அங்கீகாரத்தை ஜனாதிபதி பெற்றுள்ளார்' என அவர் தெரிவித்தார்.

மேலும், முதலீட்டுத் திட்டம் அல்லது வெளிநாட்டு உதவிக்காக இலங்கை வேறொரு நாட்டுடன் கைச்சாத்திடும் எந்தவொரு ஒப்பந்தமும் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

அத்தோடு அத்தகைய ஒப்பந்தங்களை முடிவுக்குக் கொண்டுவருவது நாடாளுமன்றத்தின் ஒப்புதலுடன் செய்யப்பட வேண்டும் என பரிந்துரைக்கும் முன்மொழிவுக்கும் அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது. (05)






இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.551 A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 31.05.2023இல் வெளியிடப்பெற்றது.
இத்துடன் நேற்றைய மாலைப்பதிப்பின் பக்கங்களும் இணைக்கப்பட்டுள்ளன.

பக்கங்கள்: 04

# காலைக்கதிர்

Kālaikkathir

மாலைப்பதிப்பு

சாயல் 04 வள்ளுவர் ஆண்டு 2054 வைகாசி 15 செவ்வாய்க்கிழமை 30.05.2023 கதிர் 73

## வவுனியா இரட்டைக் கொலைகளில் இளைஞருக்குத் தூக்குத் தண்டனை

### விதித்தார் நீதிபதி இளஞ்செழியன்

வவுனியா சமளங்குளத்தில் 2009 ஒக்டோபர் 16 வீடொன்றினுள் புகுந்து இருவரைக் கொலைசெய்து கொள்ளையிட்ட சம்பவத்துடன் தொடர்புடைய நபருக்கு வவுனியா மேல் நீதிமன்ற நீதிபதி மா. இளஞ்செழியன் இன்று தூக்குத் தண்டனை வழங்கித் தீர்ப்பளித்தார்.

கொலை மற்றும் கொள்ளை இடம்பெற்றபோது குற்றவாளிக்கு வயது 24. அவர் மீது சட்டமா அதிபர் திணைக்களத்தினால் 11 குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்பட்டிருந்தன.

தற்போது 39 வயதாகும் குற்றவாளி 2

## ஆயிரம் கிலோ பீடி இலைகள் தமிழ்நாட்டில் பிடிபட்டன

(ந.லோகதயாளன்)

தமிழ்நாடு, தூத்துக்குடியில் இருந்து இலங்கைக்குக் கடத்த முயன்றதாகக் கூறப்படும்ஒருகோடிரூபாமதிப்புள்ள பீடி இலைகளை தமிழகப் பொலிஸார் கைப்பற்றியுள்ளனர்.

தூத்துக்குடியில் இருந்து மஞ்சள், பீடி இலைகள் உள்ளிட்டபொருட்கள்இலங்கைக்கு சட்டவிரோதமாகக்கடத்தப்பட்டு வருகின்றன. திரேஸ்புரம் கடற்கரையில் இருந்து 2

### கருத்துச் சுதந்திரத்தை கட்டுப்படுத்துவதாக

# சர்வதேச மன்னிப்புச் சபை இலங்கை மீது குற்றச்சாட்டு

சிவில் மற்றும் அரசியல் உரிமைகள் தொடர்பான சர்வதேச உடன்படிக்கையின் சரத்துக்கள் நாட்டின் கருத்துச் சுதந்திரத்தினை மட்டுப்படுத்தப் பயன்படுத்தப்படுவதாக சர்வதேச மன்னிப்புச்சபை குற்றஞ்சாட்டியுள்ளது.

சர்வதேசமன்னிப்புச்சபைவெளியிட்டுள்ள அறிக்கையில்இதுகுறித்துத்தெரிவித்துள்ளதாவது:

நாடாஎதிரிசூரியவின்கருத்துக்களுக்காக அவர்கைது செய்யப்பட்டமையானது கவலை அளிக்கின்றது.

கருத்துச் சுதந்திரத்தில் அனைத்து வகையான கருத்துக்களும், யோசனைகளும் உள்ளடக்கப்பட்டுள்ளது. அத்துடன் ஒருவரைப் புண்படுத்தும் வகையில் கருத்துக்களை வெளியிடுவதும் இதில்உள்ளடக்கப்படுகின்றது,

வெறுப்புப் பேச்சுக்களை கட்டுப்படுத்தும் சட்டங்களைசிறுபான்மையினரின்கருத்துக்கள் வெளியிடும் சுதந்திரத்தினை பாதிக்காத வகையில் அதிகாரிகள் கடுமையாக நடைமுறைப்படுத்துவதற்கு நடவடிக்கைகளை முன்னெடுக்க வேண்டும்.

சிவில் மற்றும் அரசியல் உரிமைகள் தொடர்பான சர்வதேச உடன்படிக்கையின் மூன்று முதலாம் சரத்துக்கள் நாட்டு மக்களின் கருத்துச் சுதந்திரத்தினை கட்டுப்படுத்துவதற்கு அவ்வப்போது பயன்படுத்தப்பட்டு வருகின்றது – என்றுள்ளது.

## சுகாதாரத்துறையில் மாலைதீவுடன் விரைவில் புரிந்துணர்வு ஒப்பந்தம்

### அனுமதி வழங்கியது அமைச்சரவை

மாலைதீவுக்கும் இலங்கைக்கும் இடையிலான சுகாதாரத் துறை ஒத்தழைப்பை விரிவாக்குவது தொடர்பான புரிந்துணர்வு ஒப்பந்தம் ஒன்றைச் செய்துகொள்ளும் சுகாதார அமைச்சரினி யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

அரச தகவல் திணைக்களத்தில் இடம்பெற்ற அமைச்சரவை தீர்மானங்களை அறிவிக்கும் செய்தியாளர்கள் சந்திப்பில் அமைச்சரவை பேச்சாளரும், அமைச்சருமான பந்துல குணவர்தன இதனைத் தெரிவித்தார்.

சுகாதார சேவைகளை மேம்படுத்தல், அபிவிருத்தி நடவடிக்கைகளை ஊக்குவித்தல், இருநாட்டு மக்களின் ஒட்டுமொத்தநல்லாரோக்கியத்தினை மேம்படுத்துவதன் மூலம் இருநாடுகளுக்கு இடையில் சுகாதாரத்துறையில் ஒத்துழைப்புக்களைப் பலப்படுத்தல், மற்றும் முறைப்படுத்தல் போன்ற நோக்கங்களுக்காக மாலைதீவுக்கும், இலங்கைக்கும் இடையிலானசுகாதாரத்துறை ஒத்துழைப்புக்கான புரிந்துணர்வு ஒப்பந்தம் ஒன்றைச் செய்துகொள்வதற்கேஅமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது

## அமைச்சர் பந்துலவின் எச்சரிக்கை



நாட்டுக்கு நன்மை பயக்கும் வேலைத் திட்டங்களை நிறுத்த முயல்பவர்கள் தொடர்பான அனைத்துத் தகவல்களையும் வெளியிடுவேன் என்று போக்குவரத்து, நெடுஞ்சாலைகள் மற்றும் வெகுஜன ஊடகத்துறை அமைச்சர் கலாநிதி பந்துல குணவர்தன தெரிவித்தார்.

அரச தகவல் திணைக்களத்தில் இன்று நடைபெற்ற அமைச்சரவைத் தீர்மானங்களை அறிவிக்கும் செய்தியாளர்கள் சந்திப்பில் அவர் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு விசேட சலுகைச் சட்டம் உள்ளது. அதன் கீழ் அனைத்தையும் வெளிப்படுத்தும் உரிமை இருக்கிறது. 2017ஆம் ஆண்டு முதல் மேற்கொள்வதற்கு இடமளிக்காத திட்டங்கள் மற்றும் அவற்றிற்கு தடைவிதிக்கும் நபர்கள் குறித்தும் நாடாளுமன்றத்தில் வெளிப்படுத்த வேண்டும் என்று நான் கருதுகின்றேன்.

இதேநேரம், உலகில் தொழில்நுட்பம் வளர்ச்சியடைந்திருந்தாலும், மக்கள் சில்லறைக் காசுகளை மாற்றிக்கொண்டு பேருந்துகளில் பயணிக்க வேண்டிய நிலை இன்னும் உள்ளது. இது மிகவும்வருத்தமளிக்கக்கூடிய விடயம். அதன்படி, எதிர்காலத்தில் டிஜிட்டல் தொழில்நுட்பத்தின் கீழ் பொதுப் போக்குவரத்தை மேற்கொள்வதற்கு எதிர்பார்த்துள்ளோம்.

வளர்ச்சியடைந்த நாடுகளில் பஸ்களில் நடத்துனர்கள் இல்லை. பணப் பயன்பாடும் இல்லை.இலத்திரணியல்அட்டை முறையின் ஊடாக பஸ்கள் பயணிக்கின்றன. இலங்கையில் பொதுப் போக்குவரத்தை டிஜிட்டல் தொழில்நுட்பத்திற்கு ஏற்ப மாற்றுவதற்கான முன்மொழிவுகளை சமர்ப்பிக்குமாறு கோரிக்கை விடுத்தோம்.

அதன்படி, இதுவரை 12 நிறுவனங்கள் முன் வந்துள்ளன.

ஆனால் சில தரப்பினர் இந்த நடவடிக்கைகளை மேற்கொள்ள அனுமதிப்பதில்லை. இந்த நெருக்கடியான நேரத்தில், இந்த நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு எமக்கு இடமளிக்காவிட்டால், அவர்களின் விவரங்களை நாடாளுமன்றத்தில் சமர்ப்பிப்பேன் – என்றார்.

# இந்தியாவின் ஒரு பில்லியன் டொலர் கடன் வசதி மார்ச் 2024 வரை நீடிப்பு

### இலங்கையின் கோரிக்கையை அடுத்து நடவடிக்கை



அத்தியாவசியபொருட்களைகொள்வனவு செய்வதற்காக 2022 மார்ச் மாதம் இலங்கைக்கு வழங்கப்பட்ட ஒரு பில்லியன் அமெரிக்க டொலர் கடனுதவியின் காலம், இலங்கை ஆட்சியாளர்களின் கோரிக்கைக்கு அமைவாக இந்திய ஸ்டேட் வங்கியால் நீடிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் இந்த கால நீடிப்புக்கான திருத்த உடன்படிக்கையானது நிதி இராஜாங்க அமைச்சர் செஹான்சேமசிங்க, இலங்கை நிதி அமைச்சின் சிரேஷ்ட அதிகாரிகள் மற்றும் இந்திய உயர் ஆணையரகத்தின் அதிகாரிகள் முன்னிலையில் இன்று கைச்சாத்திடப்பட்டது.

இதேவேளை இந்திய ஸ்டேட் வங்கியின் அதிகாரிகள் இந்நிகழ்வில் மெய்நிகர் மார்க்கமூடாக இணைந்திருந்தனர். இந்த உடன்படிக்கை கைச்சத்திடப்பட்டமையின் பிரகாரம் 2024 மார்ச் வரையிலான மற்றொரு வருட காலப்பகுதிக்கு இந்தக் கடன் வசதியினை இலங்கை ஆட்சியாளர்கள் பயன்படுத்துவதற்கு இடமளிக்கப்பட்டுள்ளது.

கடந்தவருடம் முதல் எரிபொருள், மருந்துப்பொருட்கள், உணவுப்பொருட்கள், மற்றும் உற்பத்தி மூலப்பொருட்கள் உள்ளிட்ட பலவிதமான பொருட்களை இலங்கையின் தேவைக்கு அமைவாகவும் முன்னுரிமை அடிப்படையிலும் அவசரமாக இறக்குமதி செய்வதற்கு இந்தக் கடனுதவி திட்டம் இந்தியாவால் வழங்கப்பட்டது. இந்தியாவின் அயலுறவுக்கு முதலிடம் கொள்கையின் கீழ் பல்வேறு கடனுதவி திட்டங்கள் மற்றும் நாணய உதவிகள் ஊடாக 4 பில்லியன் அமெரிக்க டொலர் பெறுமதியான பல்நோக்கு உதவி கடந்த வருடம் இந்தியாவால் இலங்கைக்கு வழங்கப்பட்டிருந்தது. இலங்கையின் துரித பொருளாதார மீட்சி மற்றும் உறுதிப்பாட்டுக்காக இலங்கை மக்களுடனும் ஆட்சியாளர்களுடனும் துணை நிற்கும் எமது நிலையான அர்ப்பணிப்புக்கான ஓர் சாட்சியமே இலங்கைக்கான இந்திய ஆதரவு என்பது குறிப்பிடத்தக்கது.

### வருமானம் குறைந்த குடும்பங்களைச் சேர்ந்த

## மாணவர்களுக்கு இனி இலவச பேருந்து சேவை

பாடசாலை மாணவர்களுக்கான"சிசுசெரிய"பேருந்து சேவையில் இனிமேல் வருமானம் குறைந்த குடும்பங்களைச் சேர்ந்த பிள்ளைகள் இலவசமாகப் பயணிக்கலாம் என்றுஅமைச்சரவைப்பேச்சாளரான போக்குவரத்து மற்றும் வெகுஜன ஊடகத்துறை அமைச்சர் கலாநிதி பந்துல குணவர்த்தன தெரிவித்தார்.

அரச தகவல் திணைக்களத்தில் இன்று செய்தியாளர்களைச் சந்தித்து அமைச்சரவை முடிவுகளை அறிவித்தபோது அவர் இதனைத் தெரிவித்தார். அங்கு "சிசு செரிய" பேருந்து சேவை தொடர்பில் செய்தியாளர் ஒருவர் எழுப்பிய கேள்விக்குப் பதிலளிக்கும்போதே அவர் இதனைத் தெரிவித்தார். அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:

பிள்ளைகளுக்கு சிசுசெரிய பேருந்து சேவையில் இலவசமாகப்பயணிக்கவாய்ப்பு வழங்கப்படும். அதற்குத் தேவையான ஏற்பாடுகள் செய்து தரப்படும்.

சிசுசெரியபஸ்சேவையை மிகவும் சிரமத்துடன் கொண்டு செல்கின்றோம். அதற்காக அரசுக்குக் கிடைக்கின்ற உதவிகள்போதுமானதாகஇல்லை. எந்தவொரு திருத்தமும் இல்லாமல் அந்தச் சேவையை நிறுத்த முடியும். ஆனால், நாட்டில் உள்ள அனைத்து மாணவர்களுக்காகவும் முன்னெடுக்கும் இந்தச்சேவையை முற்றாக நிறுத்தும் எண்ணம் எமக்கு இல்லை.

இந்தபஸ்களில்பயணிக்கும் அனைத்துமாணவர்களுக்கும் 70சதவீதம்மானியத்தைஅரசு வழங்குகின்றறது. எஞ்சிய 30 சதவீதம் பெற்றோர்களிடம் இருந்து அறவிடப்பட்டுவந்தது. ஆனால் இன்று அந்த 30 சதவீதத்தைக் கூட பொறுப்பேற்க முடியாத பெற்றோர்கள் பலர் உள்ளனர்.

அவ்வாறான குடும்பங்களைச் சேர்ந்த மாணவர்களுக்குஎவ்விதகட்டணமும் இன்றி"சிசுசெரிய"பஸ்சேவையில் இலவசமாகப் பயணிக்க சந்தர்ப்பம் வழங்கப்படும் – என்றார்.

## கடன்மறுசீரமைப்பு வெற்றிபெற்றதும் அபிவிருத்தித் திட்டங்கள் தொடங்கும்

### அமைச்சர் தெரிவிப்பு

எதிர்வரும் செப்டம்பர் மாதத்திற்குள் கடன் மறுசீரமைப்பு வேலைத் திட்டம் வெற்றியடையும். அதன் பின்னர் இடைநிறுத்தப்பட்டுள்ள அபிவிருத்தித் திட்டங்களை மீண்டும் தொடங்க முடியும் என்று அமைச்சரவைப் பேச்சாளர் பந்துல குணவர்தன தெரிவித்தார்.

அரச தகவல் திணைக்களத்தில் இன்று நடைபெற்ற அமைச்சரவைத் தீர்மானங்களை அறிவிக்கும் ஊடகவியலாளர் மாநாட்டில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும்போதே அவர் இதனைத்தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

ஹங்கேரிய கடனுதவியில்நிர்மாணிக்கப்பட்டுவரும் கண்டி, கெட்டம்பே, கொஹவல ஆகிய பகுதிகளில் தற்போது நிர்மாணிக்கப்படும் மேம்பாலங்கள் இடைநிறுத்தப்பட்டுள்ளன. இதன் காரணமாக மக்கள் பெரும் சிரமத்திற்கு உள்ளாகியுள்ளனர். வெளிநாட்டு உதவியின்கீழ்மேற்கொள்ளப்பட்ட அனைத்துத் திட்டங்களும் தடைப்பட்டுள்ளன. ஆசிய அபிவிருத்தி வங்கியின் பிரதிநிதிகளை அந்த இடங்களுக்கு அழைத்துச் சென்று காட்டியுள்ளோம். கடனை மறுசீரமைக்கும்வரை,இந்தவீதிகளைப்பயணிக்கக்கூடியதாக மாற்ற 53 மில்லியன் அமெரிக்க டொலர்களை வழங்க அவர்கள் சம்மதித்துள்ளனர். எதிர்வரும்செப்டெம்பர் மாதத்திற்குள் கடன் மறுசீரமைப்புத் திட்டம்வெற்றியடையும்என்று நாம் நம்புகின்றோம்.

கடன் மறுசீரமைப்பு வெற்றியடைந்தவுடன், இடைநிறுத்தப்பட்டுள்ள வீதித் திட்டங்களை மீண்டும் ஆரம்பிக்கப்படும் என்றார்.

# யாழ். குடாநாட்டில் நாளை முதல் போக்குவரத்து விதிகள் இறுக்கம்

### மாவட்ட பிரதிப் பொலிஸ் மா அதிபர் அறிவிப்பு



வீதி விபத்துகளைத் தடுக்க யாழ், மாவட்டத்தில் நாளை முதல் போக்குவரத்து விதிமுறைகள் இறுக்கமாக நடைமுறைப்படுத்தப்படும்என்றுயாழ்ப்பாணமாவட்டபிரதிபொலிஸ் மா அதிபர் மஞ்சுள செனரத் தெரிவித்தார்

யாழ். குடாநாட்டில் அதிகரித்துள்ள விதி விபத்துக்கள் தொடர்பில்செய்தியாளர்களைச் சந்தித்து அவர் இதனைத் தெரிவித்தார்,

யாழ்ப்பாண குடாநாட்டில் மே மாதம் மாத்திரம் 10ற்கும் மேற்பட்ட வீதி விபத்துக்கள் இடம்பெற்றுள்ளன. இவற்றில் 10இற்கும் மேற்பட்டோர் உயிரிழந்துள்ளனர். விபத்துக்களைக் குறைக்கும் வகையில் போக்குவரத்துப் பொலிஸார் நாளை முதல் விதிமுறைகளை இறுக்கமாக நடைமுறைப்படுத்தவுள்ளனர்.

இது தொடர்பில் பிரதிப் பொலிஸ் மா அதிபர் மஞ்சுள செனரத் தெரிவித்ததாவது:

நாளை முதல் யாழ்ப்பாணக் குடாநாட்டில் போக்குவரத்து விதிமுறைகளை மீறுவோரை உரிய சட்ட நடவடிக்கைக்குட்படுத்துமாறு இன்று சகல பொலிஸ் நிலையங்களுக்கும் அறிவுறுத்தியுள்ளேன்

அத்தோடு வீதி விபத்துக்கள் ஏற்படக் கூடியவாறு மஞ்சள் கடவைக்கு அண்மையில் வாகனங்களை நிறுத்துதல், போக்குவரத்து விதிமுறைகளை மீறி வாகனம் செலுத்துதல், வேகமாக வாகனங்களைச் செலுத்துதல், தலைக் கவசம் இன்றி வாகனம் செலுத்துதல் போன்ற பல்வேறுபட்ட போக்குவரத்து விதி மீறல்களில் ஈடுபடுவோருக்கு எதிராகவும் பாரபட்சமின்றி நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது

அத்தோடு யாழ். மாவட்டத்தில் 80 வீதமானவர்கள் போக்குவரத்து விதிமுறைகளை மீறியே போக்குவரத்துச் செய்கிறார்கள். குறிப் பாக தலைக்கவசம் அணியாது செல்கிறார்கள். வேகமாகப் பயணிக்கின்றார்கள். 2

# எந்தத் தேர்தலுக்கும் சஜித் கட்சி தயாராம்

## தலதா தெரிவிப்பு

எந்தத் தேர்தலுக்கும் தயார் என்று ஐக்கிய மக்கள் சக்தி தெரிவித்துள்ளது.

அந்தக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் தலதா அத்துகோரல இதனைக் கூறியுள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

எந்தத் தேர்தலுக்கும் நாங்கள் தயார். சில வேளை ஜனாதிபதி தேர்தலைக் காட்டி காட்டி வேறு தேர்தலையும் நடத்த வாய்ப்புண்டு.

காட்டுவதே கிடைக்கும் என்று நாங்கள் நம்பவில்லை. நாங்கள் ரணில் விக்கிரம சிங்கவுடன் இருந்த ஆட்கள்தானே. ரணிலைப் பற்றி நன்றாகத் தெரியும்.

எப்படியும் உரிய நேரத்தில்தான் ஜனாதிபதித் தேர்தல் வரும். அதற்கு முன் வேறு தேர்தல் வருவதற்கே வாய்ப்புகள் அதிகம். – என்றார். (02)

# வவுனியாவில் மாணவன் மீது இளைஞர் சரமாரியாகத் தாக்கு

## வைத்தியசாலையில் சேர்ப்பு

வவுனியா, பட்டானிச்சூர் பகுதியில் மாணவன் மீது இரும்புப் பொல்லுகளால் தாக்குதல் மேற்கொள்ளப்பட்ட நிலையில் படுகாயமடைந்த உயர்தர வகுப்பு மாணவன் ஒருவர் வவுனியா மாவட்ட பொது வைத்தியசாலையில் சிகிச்சைக்காகச் சேர்க்கப்பட்டுள்ளார்.

இந்தச் சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது,

நேற்று மாலை குறித்த மாணவன் பள்ளிவாசலில் தொழுகையை முடித்துவிட்டு வீடு திரும்பிக் கொண்டிருந்த போது அங்கு வந்த மற்றொரு இளைஞர் குறித்த மாணவன் மீது இரும்பு மற்றும் பொல்லுகளால் சரமாரியாகத் தாக்குதல் மேற்கொண்டுள்ளார்.

தாக்குதலில் படுகாயமடைந்த மாணவன் மீட்கப்பட்டு வவுனியா மாவட்ட பொது வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

சம்பவத்தில் சு. சுகைர்அகமட் என்ற 18 வயதான மாணவனே காயமடைந்த நிலையில் சிகிச்சை பெற்று வருகின்றார்.

இந்தச் சம்பவம் தொடர்பில் வவுனியா பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (02)

# ஆங்கில வகுப்புக்குச் சென்ற மாணவியைக் காணவில்லை

மொரட்டுவ பல்கலைக்கழகத்தில் ஆங்கில சான்றிதழ் கற்கைநெறியைப் பயின்று வந்த மாணவி ஒருவரைக் காணவில்லை என அவரின் பெற்றோர் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளனர்.

களுத்துறை பகுதியைச் சேர்ந்த 21 வயதுடைய மாணவியே நேற்றுமுன்தினம் முதல் காணாமல்போயுள்ளார் என பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடளிக்கப்பட்டுள்ளது.

நேற்றுமுன்தினம் ஆங்கில வகுப்புக்குச் செல்வதாகத் தெரிவித்து வீட்டிலிருந்து வெளியேறிய மாணவி மீண்டும் வீட்டுக்கு வரவில்லை எனவும் முறைப்பாட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மாணவியின் கையடக்கத் தொலைபேசியும் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

காணாமல்போனதாகத் தெரிவிக்கப்படும் மாணவி தொடர்பில் இதுவரை எவ்வித தகவல்களும் கிடைக்கப்பெறவில்லை எனவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இந்தச் சம்பவம் தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (02)

# ஆற்றில் மூழ்கி மாணவன் சாவு

கம்பளை, பொத்தலபிட்டிய பிரதேசத்தில் மகாவலி ஆற்றில் நீராடச் சென்ற மாணவன் ஒருவர் நீரில் மூழ்கி உயிரிழந்துள்ளார்.

இந்தச் சம்பவம் நேற்று மாலை இடம்பெற்றுள்ளது என்று பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

கம்பளை, கஹடபிட்டிய பிரதேசத்தைச் சேர்ந்த 15 வயதுடைய மாணவனே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

நீராடச் சென்ற மாணவன் நீரில் மூழ்கி ஆபத்தான நிலையில் கம்பளை வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டதன் பின்னர் உயிரிழந்துள்ளர் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இந்தச் சம்பவம் தொடர்பில் கம்பளைப் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (02)

# மட்டக்களப்பு மக்களுடன் கிழக்கு ஆளுநர் சந்திப்பு

(பழுவூரான்)

கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமான் ஜுன் முதல் நாள் மட்டக்களப்பு மக்களை நேரில் சந்தித்துக் கலந்துரையாடவுள்ளார்.

மாவட்ட மக்களின் பிரச்சினைகள், தேவைகளைக் கேட்டறிந்து அவற்றுக்கான தீர்வைப் பெற்றுக் கொடுக்கும் நோக்கத்துடன் இந் சந்திப்புக்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. மாவட்ட செயலகத்தில் பி.ப. 2.00 மணி தொடக்கம் 4.00 மணிவரை சந்திப்புக்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

கிழக்கு மாகாண ஆளுநரின் பதவி அணியினர் அரச உயர் அதிகாரிகள் ஆகியோர் இச்சந்திப்பில் கலந்துகொள்ளவுள்ளனர். பொது மக்கள் தமது பிரச்சினைகள் குறித்து ஆளுநருடன் நேரில் கலந்துரையாட முடியும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.



# காட்டு யானை தாக்கி இருவர் பரிதாபச் சாவு

காட்டு யானை தாக்குதலுக்குள்ளாகி இரண்டு பேர் பரிதாபகர மாக உயிரிழந்துள்ளனர்.

திருகோணமலை, கோமரன்கடவல பிரதேசத்தில் வீதியில் பயணித் துக் கொண்டிருந்த ஒருவர் காட்டு யானை தாக்குதலுக்கு இலக்காகி உயிரிழந்துள்ளார் என்று பொலிஸார் தெரிவித் துள்ளனர்.

உயிரிழந்தவர் 64 வயதுடைய பக்மீகம பகுதியைச் சேர்ந்தவர் என்று பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

இதேவேளை, மதவாச்சி, பூனேவ – ஹல்மில்லேவ பகுதியில் காட்டு யானை தாக்குதலுக்குள்ளான ஒருவர் உயிரிழந்துள்ளார்.

தமது காணிக்குச் சென்று மீண்டும் வீடு திரும்பிக் கொண்டிருந் தவரே இந்த அனர்த் தத்துக்கு முகங் கொடுத்துள்ளார். (02)



## ஆயிரம் கிலோ..

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இவை கடத்தப்படுவதாகத் தமிழ்நாடு பொலிஸாருக்கு இரகசியத் தகவல் கிடைத்ததுள்ளது.

இதையடுத்து தனிப்படை அமைத்து மேற்கொண்ட நடவடிக்கையின்போது, திரேஸ்புரம் கடற்கரையில் நின்ற பட்டா ரக வாகனத்தில் இருந்த சிலர் பொலிஸாரைப் பார்த்ததும் தப்பி ஓடினர். அவர்களைத் துரத்திச் சென்ற பொலிஸார் ஒருவரை மடக்கிப் பிடித்தனர். அவரே பட்டாவை ஓட்டிவந்த சாரதி எனத் தெரியவந்தது. வாகனத்திற்குள்ளிருந்து 25 கிலோ வீதம் 49 மூடைகளில் பொதி செய்யப்பட்டிருந்த பீடி இலைகளைக் கைப்பற்றினர்..

இலங்கைக்குகடத்துவதற்காக இவற்றை அங்கு எடுத்து வந்ததாக வாகனச் சாரதி தெரிவித்தார் என்று பொலிஸார் கூறினர். இதையடுத்து அச் சமயம் கடற்கரையில் நின்ற ஓர் படகையும் பொலிஸார் பறிமுதல் செய்துள்ளனர்.

## யாழ்.குடாநாட் ..

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சன நெருக்கடிமிக்க நகரப்புறங்களிலும் வேக மாக வாகனங்களைச் செலுத்துகின்றார்கள். வீதிகளில் விபத்துக்களை ஏற்படுத்தக் கூடிய வாறு வாகனங்களை நிறுத்தி வைத்திருக்கிறார்கள். நாளை முதல் இவை அனைத்துக்கு எதிராகவும் நடவடிக்கை எடுக்கப்படும்.

யாழ்ப்பாணத்தில் உள்ள அனைத்துப் பொலிஸ் நிலையங்களிலும் கடமையாற்றும் போக்குவரத்து பொலிஸாரும் போக்குவரத்து விதிமுறைகளை மீறுவோருக்கு எதிராகக் கடுமையாகச் சட்டத்தை நடைமுறைப்படுத்தும்படி பணிபுரிப்புரை விடுத்துள்ளேன்.

யாழ். நகரப் பகுதியில் காங்கேசன் துறை வீதி மற்றும் ஆஸ்பத்திரி வீதிப் பகுதிகளில் விபத்துகள் ஏற்படுவதற்கான அதிக வாய்ப்புகள் உள்ளதால் அந்த பகுதிகள் விசேட பொலிஸ் அணியினரால் போக்குவரத்து நெரிசலைக் கட்டுப்படுத்தும் விசேட வேலை திட்டம் ஒன்றும் நாளை தொடங்கப்படும்.

பொதுமக்கள் இந்த விடயத்தில் முழு ஒத்துழைப்பு வழங்கவேண்டும். போக்குவரத்து விதிமுறைகளை கடைப்பிடித்துச் செயற்படவேண்டும் – என்றார்.

# கிழக்குப் பல்கலைக்கழகத்தில் தொழிற்சந்தை












(நூருல் ஹுதா உமர்)

இலங்கை மென்பொருள் சேவைகள் நிறுவனங்களின் ஒன்றியத்தின் சார்பில் (Sri Lanka Association for Software Services Companies - SLASSCOM) கிழக்குப் பல்கலைக்கழக தொழில் வழிகாட்டல் பிரிவின் அனுசரணையுடன் இலங்கை பல்கலைக்கழக வளாகத்தில் தொழிற் சந்தை இன்று நடைபெற்றது. தொழில் வழிகாட்டல் பிரிவு பணிப்பாளர் பேராசிரியர் அரசரெத்தினம் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில், கிழக்குப் பல்கலைக்கழக உபவேந்தர் பேராசிரியர் வ.கணகசிங்கம் அதியாகவும், ஒன்றியத் தலைவர் ஆஷிக் அலி சிறப்பு பேச்சாளராகவும் கலந்து கொண்டனர்.

அங்குராப்பண நிகழ்வு, தொழில் வழிகாட்டல் நிகழ்வு மற்றும் தொழிற் சந்தை என மூன்று அமர்வுகளாக நடைபெற்ற இத்தொழிற்சந்தையில் இலங்கை கிழக்குப் பல்கலைக்கழகத்தின் வந்தாறுமூலையில் அமைந்துள்ள கலை கலாசாரம், வர்த்தக முகாமைத்துவம், விஞ்ஞானம், தொழிநுட்பம் மற்றும் திருகோணமலை வளாகத்தின் பிரயோக விஞ்ஞானம், தொடர்பாடல் மற்றும் வணிகக்கல்விப் பீடங்களைச் சேர்ந்த இளம் பட்டதாரிகள் கலந்து கொண்டனர்.

அங்குராப்பண மற்றும் தொழில் வழிகாட்டல் அமர்வுகள் காலை நேர நிகழ்வாக கலை கலாசார பீட கேட்போர் கூடத்திலும் தொழிற்சந்தை மாலை நேர நிகழ்வாக நல்லையா கேட்போர் கூடத்திலும் இடம்பெற்றன. பிரதி உபவேந்தர் பேராசிரியர். கருணாகரன், வர்த்தக முகாமைத்துவ பீட பீடாதிபதி கலாநிதி. ஜெயராஜா, தொழிநுட்ப பீட பீடாதிபதி கலாநிதி. மதிவேந்தன், கலை கலாசார பீட பீடாதிபதி கலாநிதி. குணபாலசிங்கம், பதிவாளர் பகிரதன் மற்றும் பல்கலைக்கழக தகவல் தொடர்பாடல் தொழிநுட்ப பிரிவு பணிப்பாளர் மற்றும் அதன் விரிவுரையாளர்கள் அத்துடன் பீடங்களின் விரிவுரையாளர்களும் கலந்து கொண்டனர்.

உபவேந்தர் பேராசிரியர் வ.கணகசிங்கம் ஆரம்பித்து வைத்த தொழிற்சந்தையில், இலங்கையின் முன்னணி நிறுவனங்களின் கூடங்கள் நிறுவப்பட்டிருந்தன. இக்கூடங்களில் மாணவர்களுக்கான உடனடி நேர்முகப் பரீட்சைகள் நடத்தப்பட்டதுடன் இளம் பட்டதாரிகளை பயிலுனர்களாக இணைந்து கொள்வதற்கான வாய்ப்புகளும் வழங்கப்பட்டன. பட்டதாரிகளுக்கான வேலைவாய்ப்புகளும் ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டன. மேலும், இளம் பட்டதாரிகள் பல்கலைக்கழகக் கல்வியைப் பூர்த்திசெய்து கொண்டதோடு எவ்வாறு தொழில் உலகிற்கு பிரவேசிப்பது என்பது தொடர்பான தொழில் வழிகாட்டல் ஆலோசனைகளை பல்வேறு நிறுவனங்கள் வழங்கியதுடன், இளம் பட்டாதரிகள் மற்றும் பட்டதாரிகளின் சுயவிவரத் தரவுகள் சேகரிக்கப்பட்டு அவர்களுக்கான தொழில் வாய்ப்பு தளங்கள் பற்றிய அறிவுரைகளும் வழங்கப்பட்டன.

## வவுனியா ..

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அனைத்துக் குற்றங்களையும் புரிந்துள்ளார் என்று நீதிபதி இன்று அறிவித்தார். முதல் 9 குற்றச்சாட்டுகளுக்கும் 16 வருட கடூழிய சிறைத்தண்டனை வழங்கித் தீர்ப்பளித்த நீதிபதி, 10 ஆயிரம் ரூபா தண்டமும் விதித்தார்.

தண்டப்பணம் செலுத்தத் தவறும் பட்சத்தில் மேலும் இரண்டு மாதம் கடூழிய சிறைத்தண்டனை அனுபவிக்க வேண்டும் என்றும் நீதிபதி தனது தீர்ப்பில் தெரிவித்துள்ளார்.

குற்றவாளி மீதான 10 மற்றும் 11ஆம் குற்றச்சாட்டுகளுக்கு தூக்குத் தண்டனை வழங்கியும் தீர்ப்பளித்தித்தார். (100)

காலைக்கதிர் Kalaikkathir மாலைப்பதிப்பு



# வடக்கு, கிழக்கு மற்றும் மலையகத்தை கல்வியில் உச்சத்திற்கு கொண்டுவர பேராசிரியர்கள் இணைந்து செயற்பட்டால் முடியும்

## ஆறு. திருமுருகன் கோரிக்கை

பேராசிரியர்கள் ஒன்றிணைந்து செயற்படுவார்கள் என்றால் வடக்கு கிழக்கு மற்றும் மலையகத்தை கல்வியால் உச்சத்துக்குக் கொண்டுவர முடியும் என செஞ்சோற் செல்வர் ஆறு. திருமுருகன் தெரிவித்தார்.

செஞ்சொற் செல்வர் ஆறு. திருமுருகன் அறநிதிய சபை நடத்தும் இளைய தலைமுறை ஆற்றலாளர் விருது வழங்கும் நிகழ்வு ஞாயிற்றுக்கிழமை தெல்லிப்பழை துர்க்காதேவி தேவஸ்தான அன்னபூரணி மண்டபத்தில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் தலைமையுரை ஆற்றும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

பேராசிரியர்கள் சமூகப்பொறுப்பாளர்கள் சான்றோர்கள் ஒன்றுகூடி நிலைபேறான அபிவிருத்தி தொடர்பில் சிந்திக்கவேண்டும் பேராசிரியர்கள் நல்லதை நினைப்பார்கள் என்றால் வடக்கு கிழக்கு மலையகத்தை கல்வியால் உச்சத்துக்குக் கொண்டு வரமுடியும்.

பல்கலைக்கழகத்துக்குள் மாத்திரம் பேராசிரியர்கள் இருக்காது சமூகத்திற்குள் இறங்கி சமூகத்தைப் பாதுகாக்க முன்வரவேண்டும். யாழ்.பல்கலைக்கழகத்தில் தற்போதுள்ள துணைவேந்தரின் காலத்தில் பல பேராசிரியர்கள் உருவாகி வருகின்றார்கள்.

இவ்வாறாக வருகின்ற அனைத்துப் பேராசிரியர்களும் ஒன்றிணைந்து சமுதாயத்தை முன்னேற்றவேண்டும்.

அது மட்டுமன்றி துணைவேந்தர் பல்கலைக்கழகத்திற்கு புதிய பாடத்திட்டம் ஒன்றை ஆரம்பிக்க வேண்டும் என்றால் அதற்கு காணிகள் கட்டடங்கள் இல்லை என்று அந்தத் திட்டத்தைக் கைவிடாது தெல்லிப்பழை தேவஸ்தானத்திடம் தொடர்பு கொண்டால் நாம் அதற்கான வழி அமைத்துத் தருவோம்.

யாழ்ப்பாணத்துக்கு திருமண மண்டபங்கள் போதும் இனி கல்வி மண்டபங்கள் உருவாக வேண்டும். தொழிற்சாலைகள் உருவாகவேண்டும். இதன்மூலம் கல்வி இடைவிலகிய மாணவர்கள் வேலைவாய்ப்பில்லாதவர்களுக்கு உரிய பயிற்சிகளை வழங்கி வேலை வாய்ப்புக்களை வழங்க முன்வரவேண்டும்.

தற்போதைய சூழலில் தனியார் பல்லைகழகங்களுக்கு அனுமதி வழங்கப்பட்டு வருகின்றது. இத்தகைய அனுமதிகள் பெற்று தனியார் பல்கலைக்கழகங்கள் இங்கும் உருவாகின்றபோது வாள்வெட்டுக் கலாச்சாரம் போதைவஸ்துக் கலாச்சாரங்கள் இல்லாது போகும் நிலை ஏற்படும் எனவே, பேராசிரியர்கள் கல்விமான்கள் சமுதாயப் பெரியார்கள் சான்றோர்கள் ஒன்றுகூடி இதற்கான முயற்சிகளை எடுக்கவேண்டும்.

எமது பிரதேசத்தை அழகாக்குவதற்கு தெற்கில் இருந்துதான் யாரும் வரவேண்டியது இல்லை நாங்களே அதனைசெய்ய முன்வரவேண்டும். இளைய தலைமுறையினர் கற்பனை வளம் இல்லாதவர்களாக காணப்படுகின்றார்கள். பிறர் கற்பனையிலேயே அவர்கள் இருக்கின்றார்கள். இதில் மாற்றத்தை ஏற்படுத்தவேண்டும் நல்லமுயற்சிகளை செய்யத்தொடங்கினால் அலையத்தேவையில்லை எல்லாம் எங்களைத் தேடியே வரத்தொடங்கும் நல்லதை சிந்திக்கவேண்டும். – என்றார். (05)

# பெரமுனவின் கொள்கைகளை ஏற்பவரையே ஜனாதிபதி வேட்பாளராக அறிவிப்போம்

## சந்திரசேன குற்றச்சாட்டு



ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் உறுப்பினர் அல்லது பொதுஜன பெரமுனவின் கொள்கைகளை ஏற்றுக் கொள்பவரை ஜனாதிபதி வேட்பாளராக அறிவிப்போம்.

கட்சியை வலுப்படுத்தும் வகையில் எதிர்வரும் மாதம் முதல் நாடளாவிய ரீதியில் பிரசாரக் கூட்டங்களை முன்னெடுப்போம் என ஆளும் தரப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.எம். சந்திரசேன தெரிவித்தார்.

அநுராதபுரம் பகுதியில் இடம்பெற்ற பொதுஜன பெரமுனவின் தொகுதி அமைப்பாளர் கூட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றுகையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் குறிப்பிட்டவை வருமாறு –

பொருளாதார நெருக்கடிக்கு தீர்வு காண்பதற்கு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு முழுமையான ஒத்துழைப்பு வழங்குவோம்.

பொருளாதாரப் பாதிப்புக்கு மத்தியில் பொதுஜன பெரமுனவை அரசியலில் இருந்து முழுமையாக புறக்கணிக்க மக்கள்விடுதலை முன்னணி எடுத்த முயற்சிகள் தோல்வியடைந்துள்ளன.

காலி முகத்தில் போராட்டக்களத்தில் எவ்வாறானவர்கள் முன்னிலை வகித்தார்கள் என்பதை நாட்டு மக்கள் தற்போது விளங்கிக் கொண்டுள்ளார்கள்.

புத்தசாசனத்தை அவமதித்து சமூக வலைத்தளங்கள் ஊடாக பிரபல்யமடையும் தரப்பினரே போராட்டக்களத்தில் முன்னிலை வகித்தார்கள்.

காலி முகத்திடல் போராட்டககளத்தின் பெறுபேறு தற்போது வெளியாகுகின்றன. மக்கள் விடுதலை முன்னணியினர் புத்தசாசனத்தையும் அரசமைப்பையும் மதிப்பதில்லை.

ஆகவே நாட்டு மக்கள் ஒருபோதும் மக்கள் விடுதலை முன்னணி தலைமையிலான அரசாங்கத்தைத் தோற்றுவிக்கமாட்டார்கள்.

அரசமைப்பின் பிரகாரம் 2024 ஆம் ஆண்டு இறுதிப்பகுதியில் ஜனாதிபதி தேர்தல் இடம்பெறும். ஐக்கிய மக்கள்சக்தியின் உறுப்பினர்களில் பெரும்பாலானோர் ஜனாதிபதி வேட்பாளர்களாக களமிறங்குவார்கள்.

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன தலைமையிலான அரசாங்கத்தில் இருந்து விலகி நாடாளுமன்றத்தில் சுயாதீனமாக செயற்படும் தரப்பினரும் ஜனாதிபதி வேட்பாளர்களாக களமிறங்குவார்கள்.

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் உறுப்பினர் அல்லது பொதுஜன பெரமுனவின் கொள்கைகளை முழுமையாக ஏற்றுக்கொள்பவரை ஜனாதிபதி வேட்பாளராக அறிவிப்போம்.

பொதுஜன பெரமுனவின் கொள்கைகளை முன்னிலைப்படுத்தி கட்சியை வலுப்படுத்தும் வகையில் எதிர்வரும் மாதம் முதல் நாடளாவிய ரீதியில் பிரசார நடவடிக்கைகளில் ஈடுபடுவோம். – என்றார். (05)

# கைதுசெய்யப்பட்ட பௌத்தமதகுருவை திரை மறைவு சக்திகள் இயக்குகின்றன

## பௌத்தமதகுரு குற்றச்சாட்டு



திரை மறைவு சக்திகளின் செயற்பாடுகளேயே பௌத்த மதகுரு ஒருவர் பௌத்தத்துக்கு எதிராகக் கருத்து வெளியிட்டுள்ளார்.

ரஜயங்கனய சத்ஹரத்ன தேரரின் சமூக ஊடக செயற்பாடுகள் குறி;த்து சிஐடியினரிடம் முறைப்பாடு செய்த பகியங்கல அனந்த சாகர தேரர் இதனைத் தெரிவித்துள்ளார்.

ரஜங்கனய சத்ஹரத்ன தேரரை திரைமறைவு சக்திகள் இயக்குகின்றன என அவர் சந்தேகம் வெளியிட்டுள்ளார்.

இனங்களிற்கு இடையில் ஐக்கியமின்மையை ஏற்படுத்தும் வகையில் ரஜங்கனய சத்ஹரத்ன தேரர் சமூக ஊடகங்களில் செயற்பட்டு வந்தார் என அனந்த சாகர தேரர் தெரிவித்தார்.

சமீபகாலத்தில் பல தனிநபர்கள் மதநிந்தனையில் ஈடுபட்டுள்ளனர் இவர்களில் பல பௌத்த மதகுருமாரும் உள்ளனர் இவர்கள் பௌத்தசாசனத்தையும் அவமதிக்கின்றனர் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

அவர்களில் ஒருவர் ரஜங்கனய சத்ஹரத்ன தேரர். அவர் வெறுப்புணர்வை சமூக ஊடகங்களின் மூலம் ஆபாசமான மொழி பிரயோகத்துடன் பரப்புகின்றார் எனவும் அனந்த சாகர தேரர் தெரிவித்துள்ளார்.

சிரேஸ்டமதகுருமாருக்கு எதிராகவும் மகாநாயக்க தேரர்கள் பெண்கள் சிறுவர்களிற்கு எதிராகவும் இவர் வெறுப்புணர்வு கருத்துக்களை தெரிவித்து வருகின்றார் கொலைகள் சமூகத்தில் வன்முறைகளை தூண்டுதல் குறித்தும் அவர் கருத்து தெரிவித்து வருகின்றார் எனவும் அனந்த சாகார தேரர் தெரிவித்துள்ளார்.

மதஐக்கியமின்மையை ஏற்படுத்துவதற்காக ரியா சட்டத்தை ஆதரித்துள்ள அவர் இதன் மூலம் மத ஐக்கியமின்மையை ஏற்படுத்த முயல்கின்றார் சிறுபான்மை மற்றும் மதகுழுக்கள் மத்தியில் பதற்றத்தை அதிகரிப்பதற்காக அவர் கருத்துக்களை வெளியிட்ட தருணங்களும் உள்ளன எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

அவரது சமூக ஊடக நடவடிக்கைகள் ஏற்றுக்கொள்ளக்கூடியவையா என பலர் கேள்வி எழுப்பியுள்ளனர் நாங்கள் அவரின் பிரிவின் தலைமைக்கு இது குறித்து எச்சரித்ததுடன் சமூக ஊடகங்களில் அவரின் நடவடிக்கைகளை கண்டித்தபோதிலும் அவர் தனது நடவடிக்கைகளை திருத்திக்கொள்ள முயலவில்லை என தெரிவித்துள்ள அனந்த சாகர தேரர், அவரின் பின்னால் திரைமறைவு சக்திகள் இருந்து அவரை ஆட்டுவிக்கின்றன என நாங்கள் கருதுகின்றோம் எனவும் தெரிவித்துள்ளார்.

அவரது வங்கிக்கணக்குகளிற்கு பல பணப்பரிமாற்றங்கள் இடம்பெற்றுள்ளதாக குற்றம்சாட்டப்படுகின்றது எனினும் இதுவரை இது தொடர்பாக எவரும் நட வடிக்கை எடுக்கவில்லை எனவும் அவர் தெரிவித்துள்ளார். (05)

# கோட்டாவை ஆட்சிக்குக் கொண்டுவர புத்தசாசனத்தை பயன்படுத்தியவர்கள் மீண்டும் களமிறங்கியுள்ளார்கள்

## பௌத்தர்களே அவதானம் என்கிறார் சம்பிக்க



நாட்டை வங்குரோத்து நிலைக்கு தள்ளியவர்கள் ஒட்டுமொத்த மக்களிடமும் மன்னிப்பு கோர வேண்டும். கோட்டாபய ராஜபக்சவை ஆட்சிக்கு கொண்டு வர புத்தசாசனத்தை ஒரு கருவியாக பயன்படுத்தியவர்கள் தற்போது மீண்டும் களமிறங்கியுள்ளார்கள்.

ஆகவே நாட்டு மக்கள் குறிப்பாக பௌத்தர்கள் அவதானத்துடன் செயற்பட வேண்டும் என ஐக்கிய குடியரசு முன்னணியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான பாட்டலி சம்பிக்க ரணவக்க தெரிவித்தார்.

காலஞ்சென்ற மாதுலுவாவே சோபித தேரரின் 81 ஆவது ஜனன தினத்தை முன்னிட்டு நாடாளுமன்ற சுற்றுவட்டத்தில் உள்ள மாதுலுவாவே சோபித தேரரின் நினைவு தூபிக்கு அருகில் இடம்பெற்ற மத வழிபாட்டில் ஈடுபட்டதன் பின்னர் ஊடகங்களுக்குக் கருத்து தெரிவிக்கையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் குறிப்பிட்டவை வருமாறு –

புத்தசாசனம் மற்றும் பௌத்த மதத்தை இலக்காக கொண்டு வெறுக்கத்தக்க பேச்சுக்கள் தற்போது தீவிரமடைந்துள்ளன. கருத்து சுதந்திரத்தை அடிப்படை மனித உரிமைகளுக்குள் வரையறுத்துக் கொண்டால் எந்த பிரச்சினைகளும் தோற்றம் பெறாது. அரசமைப்பால் கருத்து மற்றும் பேச்சு சுதந்திரம் வழங்கப்பட்டுள்ளது என்பதற்காக விரும்பிய அனைத்தையும் பேச முடியாது.

2019 ஆம் ஆண்டு கோட்டாபய ராஜபக்ச உட்பட ராஜபக்சர்களை ஆட்சிக்கு கொண்டுவர புத்தசாசனம் மற்றும் பௌத்த மதம் பிரதான கருவியாக பயன்படுத்தப்பட்டது. பௌத்த மதத்துக்கு பாதிப்பு என்று குறிப்பிட்டுக் கொண்டு ஆட்சிக்கு வந்த ராஜபக்சர்கள்; ஒட்டுமொத்த மக்களின் வாழ்வாதாரத்தையும் இல்லாதொழித்துள்ளார்கள்.

ராஜபக்சர்களின் தவறான நிர்வாகத்தால் ஒட்டுமொத்த பௌத்தர்களும் பாதி;க்கப்பட்டுள்ளார்கள். 2019 ஆம் ஆண்டு புத்தசாசனம் மற்றும் பௌத்த மதத்தை முன்னிலைப்படுத்தியவர்கள் தற்போது மீண்டும் களமிறங்கியுள்ளார்கள். ஆகவே நாட்டு மக்கள் குறிப்பாக பௌத்தர்கள் அவதானத்துடன் செயற்பட வேண்டும்.

நாட்டை வங்குரோத்து நிலைக்குத் தள்ளியவர்கள் ஒட்டுமொத்த மக்களிடமும் மன்னிப்பு கோர வேண்டும். ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் அரச தலைவர்கள் உட்பட அமைச்சரவை உறுப்பினர்கள் பொருளாதார பாதிப்புக்கும் தமக்கும் எவ்வித தொடர்பும் இல்லை என்ற நிலைப்பாட்டில் இருந்துக் கொண்டு செயற்படுகின்றமை ஆச்சரியத்துக்குரியது. (05)

# வெளிநாட்டிலுள்ள இலங்கையர்கள் கடவுச்சீட்டை இணைய வழியில் ஜூன் முதல் புதுப்பிக்கலாமாம்




வெளிநாட்டில் உள்ள இலங்கையர்கள் புதிய கடவுச்சீட்டுக்கு விண்ணப்பிக்கும்போதும், கடவுச்சீட்டைப் புதுப்பிக்கும்போதும் எதிர்வரும் ஜூன் முதலாம் திகதி முதல் இணைவழி மூலம் விண்ணப்பிக்க முடியும் என சர்வதேச உறவுகள் குறித்த துறைசார் மேற்பார்வைக் குழுக் கூட்டத்தில் தெரிவிக்கப்பட்டது.

சர்வதேச உறவுகள் குறித்த துறைசார் மேற்பார்வைக்குழு அதன் தலைவர் நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ச தலைமையில் அண்மையில் நடைபெற்றது. இந்தக் கூட்டத்தில் கலந்துகொண்ட குடிவரவு மற்றும் குடியகல்வுத் திணைக்களத்தின் அதிகாரிகள் இதனைத் தெரிவித்தனர்.

வெளிநாடுகளில் உள்ள இலங்கையர்கள் அந்தந்த நாடுகளில் உள்ள இலங்கைத் தூதரகங்களுக்குச் செல்லாமல் ஒன்லைன் மூலம் கடவுச்சீட்டுக்கு விண்ணப்பிக்க முடியும் என அதிகாரிகள் சுட்டிக்காட்டினர். இலத்திரனியல் கடவுச்சீட்டை நடைமுறைப் படுத்துவது தொடர்பாக இந்தக் குழுவில் கலந்துரையாடப்பட்டது. இதற்கான நடவடிக்கைகளை விரைவுபடுத்துமாறு குழுவின் தலைவர் சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு பணிப்புரை விடுத்தார்.

ஒன்லைன் வீசா விண்ணப்பத்தில் காணப்படும் குறைபாடுகள் உள்ளிட்ட பல்வேறு பிரச்சினைகள் தொடர்பாகவும் இதன்போது விவாதிக்கப்பட்டது.

அந்த நோக்கத்திற்காக, வெளிநாட்டவர்கள் சிரமமின்றி விசாவைப் பெறுவதற்குத் தேவையான பொறிமுறையை விரைவாகத் தயாரித்து நடைமுறைப் படுத் துமாறும், இலங்கையின் சர்வதேச விமான நிலையங்களின் உள்ளூர் மற்றும் வெளிநாட்டவர்களுக்கான மேலும் மேம்படுத்துவதற்குத் தேவையான நடவடிக்கைகளை எடுக்குமாறும் குழுவின் தலைவர் அதிகாரிகளுக்கு அறிவுறுத்தினார்.

அதிக வருமானம் ஈட்டும் வகையில் ஐரோப்பிய நாடுகளிலிருந்து சுற்றுலாப் பயணிகளை இலங்கைக்குக் ஈர்க்கவேண்டியதன் தேவை தொடர்பாக இங்கு விரிவாகக் கலந்துரையாடப்பட்டதுடன், இதற்கு அவசியமான நடவடிக்கைகளை காலதாமதம் இன்றி மேற்கொள்ளுமாறும் அதிகாரிகளுக்கு பணிப்புரை விடுக்கப்பட்டது. (05)

# புத்தசாசனத்துக்குப் பாதிப்பெனக் குறிப்பிட்டு உண்மை பிரச்சினை மூடிமறைக்கப்படுகிறது!

## டிலான் பெரேரா சாடல்



ஜெரோம் பெர்னாண்டோ, ஞானசார தேரர் ஆகிய இருவரும் நாணயத்தின் இரு பக்கங்களை போன்றவர்கள். இருவரும் மதவாதிகளே.

புத்தசாசனத்துக்கு பாதிப்பு என்று குறிப்பிட்டுக் கொண்டு உண்மை பிரச்சினைகளை மூடி மறைக்கும் செயற்பாடுகள் மாத்திரமே முன்னெடுக்கப்படுகின்றன என நாடாளுமன்றத்தில் சுயாதீனமாக செயற்படும் சுதந்திர மக்கள் சபையின் பிரதிநிதி டிலான் பெரேரா தெரிவித்தார்.

நாவல பகுதியில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போது மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் குறிப்பிட்டவை வருமாறு -

நாட்டில் கடந்த காலங்களை காட்டிலும் தற்போது சமூக விரோத செயற்பாடுகள் தீவிரமடைந்துள்ளன. கடந்த ஐந்து மாத காலத்துக்குள் மாத்திரம் 27 துப்பாக்கிச்சூடு சம்பவங்கள் இடம்பெற்றுள்ளதுடன், அதனால் 19 பேர் உயிரிழந்துள்ளார்கள்.

போதைப்பொருள் வியாபாரம், பாதாள குழு செயற்பாடு என்பன பகிரங்கமாகவே இடம்பெறுகின்றன. மேல் மற்றும் தென் மாகாணங்களில் பாதாள குழுவின் செயற்பாடுகள் தீவிரமடைந்துள்ளன. பொதுமக்களின் பாதுகாப்பு கேள்விக்குள்ளாகியுள்ளன. நாட்டின் சட்டம் மற்றும் ஒழுங்கு முறையாக பேணப்படுவதில்லை.

புத்தசாசனத்துக்கு பாதிப்பு என்று குறிப்பிட்டுக் கொண்டு நாட்டின் உண்மை பிரச்சினைகளை மூடி மறைக்கும் செயற்பாடுகள் மாத்திரமே முன்னெடுக்கப்படுகின்றன. அரசாங்கத்துக்கு சார்பாக செயற்படும் ஒருசில ஊடகங்களும் இவ்வாறான விடயங்களுக்கு மாத்திரம் முன்னுரிமை வழங்குகின்றன.

மத போதகர் ஜெரோம் பெர்னாண்டோ குறிப்பிட்ட கருத்து முறையற்றது. இவ்விடயத்தில் சட்ட நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படும் பின்னணியில் அந்த விடயம் அரசியலுக்காகவும், நாட்டின் பிரதான பிரச்சினையாகவும் பேசப்படுகிறது.

ஜெரோம் பெர்னாண்டோவின் விவகாரத்துக்கு பின்னர் தற்போது நகைச்சுவை மேடை பேச்சாளர் நடாா எதிரிசூரிய என்பவரின் விவகாரம் பிரதான விடயமாக பேசப்படுகிறது. மதபோதகர் ஜெரோம் பெர்னாண்டோவின் விவகாரத்தை தொடர்ந்து கடந்த காலங்களில் தலைமறைவாகியிருந்த பலர் தற்போது வெளிவந்துள்ளார்கள்.

ஜெரோம் பெர்னாண்டோ, ஞானசார தேரர் ஆகிய இருவரும் நாணயத்தின் இரு பக்கங்களை போன்றவர்கள். இருவரும் மதவாதிகளே, தேவையில்லாத பிரச்சினைகளை மாத்திரம் தோற்றுவிக்கிறார்கள். - என்றார். (05)

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

## மனித வள இழப்பைத் தடுப்பது யார்?

**இலங்கைக்கு அன்னியச் செலாவணியான டொலரை ஈட்டித் தரும் பெருந்துறைகள் மூன்று. தேயிலை உற்பத்தி, தைத்த ஆடைகளின் ஏற்றுமதி, சுற்றுலாப் பயணிகள் வருகை. இதில் சுற்றுலாப் பயணிகள் வருகையைத் தவிர மற்றைய இரு துறைகளும் கடந்த இரண்டு ஆண்டுகளாகத் தொடர்ந்து சரிவைச் சந்தித்து வருகின்றன.**

**அரசுத்தலைவராக கோட்டாபய பதவியில் இருந்த போது எடுத்த முற்றிலும் இயற்கை விவசாயம் என்கிற கொள்கை தேயிலைத் தோட்டங்களின் உற்பத்தியைப் பாதித்தது. அத்தோடு பொருளாதார நெருக்கடியால் ஏற்பட்ட உற்பத்திச் செலவு அதிகரிப்பு வேறு சந்தையில் இலங்கைத் தேயிலைக்கான கேள்வியைக் குறைத்தது.**

**தற்போது, தைத்த ஆடைகள் மற்றும் துணிப் பொருட்களுக்கு வெளிநாடுகளில், குறிப்பாக மேற்கு நாடுகளில் இருந்து கிடைக்கும் கொள்முதல் கட்டளைகள் குறைந்து வருகின்றன. இந்த ஆண்டின் முதல் காலாண்டில் எதிர்பார்க்கப்பட்டளவு கொள்முதல் கட்டளைகள் கிடைக்கவில்லை என்று தைத்த ஆடைகளின் ஏற்றுமதியாளர் சங்கத்தினர் கவலை தெரிவிக்கின்றனர்.**

**இப்படிப் பெருந் தொழிற்றுறைகள் பாதிக்கப்படும்போது பெரும் எண்ணிக்கையிலானவர்கள் வேலை இழப்பைச் சந்திப்பதும் கட்டாயம் நடக்கும். குறிப்பாக இந்தத் தொழிற்றுறைகளில் பணியாற்றும் ஏராளமான இளைஞர்கள், இளம் பெண்கள் தொழிலை இழக்கும்போது அவர்களுக்கு மாற்று வாய்ப்புக்களும் இருக்காது.**

**கடவுச் சீட்டு அலுவலகத்தில் நாளாந்தம் நிரம்பி வழியும் ஆட்களின் எண்ணிக்கையைப் பார்க்கும்போது, எவ்வளவு பேர் தொழில் வாய்ப்பைத் தேடி வெளிநாடுகளுக்கு ஒடுகின்றார்கள் என்பது தெரிகின்றது. உள்ளூரில் தொழில்வாய்ப்புக்கள் இல்லை என்றால் அதைத் தேடி வெளிநாடுகளுக்காவது ஒடுவதைத் தவிர வேறு என்ன வழி இருக்கின்றது?**

**இவற்றையெல்லாம் சரி செய்து வேலை இழப்புக்களைத் தடுத்து நிறுத்துவதற்கோ, பொருளாதார இயல்வு நிலைக்கு மீள்வதை விரைவுபடுத்துவதற்கோ ஆட்சியாளர்கள் இதுவரையில் காத்திரமான நடவடிக்கைகள் எதனையும் எடுத்துள்ளதாகத் தெரியவில்லை. அதற்கிடையில் தேர்தலை இலக்கு வைத்த நடவடிக்கைகளிலேயே ஆட்சியாளர்கள் கண்ணும் கருத்துமாக இருக்கிறார்கள்.**

**ஒருபுறத்தில் துறைசார் வல்லுநர்களான மூளைசாலிகளின் வெளியேற்றம் மறுபுறத்தில் உழைப்பாளர்களின் வெளியேற்றம் என்று இலங்கை தனது மனித வளத்தை இழந்து கொண்டிருக்கின்றது. அதைத் தடுத்து நிறுத்துவதற்கான நடவடிக்கைகளுக்குப் பதில் அதை ஊக்குவிக்கக்கூடிய நடவடிக்கைகளையே இதுவரையில் ஆட்சியாளர்கள் எடுத்து வந்திருக்கின்றனர்.**

**இந்த நிலை இப்படியே தொடர்ந்தால், நாடு இன்னும் அதளபாதாளத்தை நோக்கிச் செல்லுமே தவிர நெருக்கடிகளில் இருந்து மீண்டு வராது. அரசியல் தலைவர்கள் அதிகாரத்தின் மீது கவனம் செலுத்துவதைவிட்டுவிட்டு, உண்மையான பிரச்சினைகளைத் தீர்ப்பதில் தீவிர கவனம் செலுத்த வேண்டும்.**

# தமிழ் மக்களை மிரட்டும் தொனியில் கருத்து வெளியிடுகின்றார் வீரசேகர

### ஜனநாயகப் போராளிகள் துளசி குற்றச்சாட்டு



சரத்வீரசேகர அண்மைக்காலமாக தமிழ் மக்களை மிரட்டும் தொனியில் கருத்துகளை வெளியிடுகிறார் எனவும் அவ்வாறு வெளியிடும் கருத்துக்களை இந்தியா உட்பட சர்வதேச நாடுகள் உன்னிப்பாக அவதானித்து வருகின்றன எனவும் ஜனநாயக போராளிகள் கட்சியின் ஊடக பேச்சாளர் க.துளசி குறிப்பிட்டுள்ளார்.

இலங்கையில் இனப்படுகொலைசெய்தபடையினரை நினைவுகூரும் நினைவு தூபியில் தமிழர்களையும் நினைவு கூருவதை ஏற்றுக்கொள்ள முடியாதெனவும் அதனை வன்மையாக கண்டிப்பதாக ஜனநாயக போராளிகள் கட்சியின் ஊடகப் பேச்சாளர் க.துளசி தெரிவித்துள்ளார்.

ஜனநாயக போராளிகள் கட்சியின் ஊடக சந்திப்பு யாழில் உள்ள விடுதி ஒன்றில் இடம்பெற்றிருந்த நிலையில் அவர் இவ்வாறு தெரிவித்திருந்தார்.

அனைத்து இனத்தவர்களும் நினைவு கூருவதற்கான பொதுவான நினைவுத் தூபி அமைக்கும் செயற்பாட்டை ஏற்றுக்கொள்ள முடியாது என்றும் பொது நினைவுத் தூபி என்பது பாதிக்கப்பட்ட தமிழ் மக்களின் உணர்வுகளை வெகுவாகப் பாதிக்கும் என்றும் குறிப்பிட்டுள்ளார். (05)

# தினேஷ் ஷாப்டரின் சடலம் மீதான முதற்கட்ட பரிசோதனைகள் நிறைவு



மர்மமான முறையில் உயிரிழந்த பிரபல தொழிலதிபர் தினேஷ் ஷாப்டரின் சடலம் மீதான முதற்கட்ட பரிசோதனைகள் நிறைவடைந்துள்ளன என கராப்பிட்டிய போதனா வைத்தியசாலையின் சட்ட வைத்திய அதிகாரி ரொஹான் டி.ருவன்புர தெரிவித்துள்ளார்.

மர்மமான முறையில் உயிரிழந்த பிரபல வர்த்தகர் தினேஷ் ஷாப்டரின் உடல் கடந்தவாரம், நீதிமன்ற உத்தரவின் பேரில் தோண்டியெடுக்கப்பட்ட நிலையில், சடலம் மீது தடயவியல் பரிசோதனை மேற் கொள்ளப்பட்டது.

இந்த நிலையில், முதற்கட்ட பரிசோதனைகள் நிறைவடைந்துள்ளதாகவும் சடலம் தொடர்பான மேலதிக பரிசோதனைகள் தொடர்ந்தும் முன்னெடுக்கப்படுகின்றன எனவும் கராப்பிட்டிய போதனா வைத்தியசாலையின் சட்ட வைத்திய அதிகாரி ரொஹான் டி.ருவன்புர தெரிவித்துள்ளார்.

பிரேத பரிசோதனை குறித்த முழுமையான அறிக்கையை வெளியிடுவதற்கு இன்னும் 2 மாதங்கள் செல்லும் எனவும் இந்த அறிக்கை பொலிஸாரிடம் ஒப்படைக்கப்படும் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

பிரபல தொழிலதிபர் தினேஷ் ஷாப்டரின் உயிரிழப்பு தொடர்பாக தடயவியல் ஆய்வுகளை மேற்கொள்வதற்காக நியமிக்கப்பட்ட ஐவரடங்கிய விசேட சட்ட மருத்துவ அதிகாரிகளால், நீதிமன்றத்தில் முன்வைக்கப்பட்ட கோரிக்கைக்கு அமைய ஷாப்டரின் சடலம் கடந்த 25 ஆம் திகதி தோண்டி எடுக்கப்பட்டது. பொரளை பொது மயானத்தில் தனது காரில் கை கட்டப்பட்டு, கழுத்து நெரிக்கப்பட்ட நிலையில் கடந்த வருடம் டிசெம்பர் மாதம் 15 ஆம் திகதி தினேஷ் ஷாப்டர் மீட்கப்பட்டார்.

கொழும்பு தேசிய வைத்தியசாலையின் அதிதீவிர சிகிச்சை பிரிவில் சேர்க்கப்பட்ட தினேஷ் ஷாப்டர் அன்றைய தினம் இரவு உயிரிழந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (05)

# ஆர்ப்பாட்டங்களைக் கையாளுதல் குறித்த பரிந்துரைகள் தொடர்பாக யாழில் ஆராய்வு

### மனித உரிமைகள் ஆணைக்குழு ஏற்பாட்டில் நடந்தது

பொதுமக்களின் எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்களை கையாளுதல் தொடர்பாக அரசாங்கத்துக்கும் சட்டத்தை அமுலாக்கும் அதிகாரிகளுக்கும் சிபாரிசு செய்யப்படும் பரிந்துரைகள் தொடர்பான கலந்துரையாடல் யாழ்ப்பாணத்தில் இடம்பெற்றது.

இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ்ப்பாண பிராந்திய அலுவலகத்தின் ஏற்பாட்டில் நேற்று திங்கட்கிழமை பிற்பகல் 2 மணிக்கு யாழ்ப்பாண பிரதேச செயலகத்தில் நடைபெற்றது.

பொது மக்களின் எதிர்ப்பு போராட்டங்களைக் கையாள்வதில் அரச மற்றும் சட்ட அமுலாக்க அதிகாரிகளுக்கு இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு பரிந்துரைக்கப்பட்ட வழிகாட்டுதல்களை மே மாதம் 12 ஆம் திகதி கொழும்பில் வெளியிட்டது. பிராந்திய மட்டத்தில் இந்த வழிகாட்டுதல்களை அறியப்படுத்துவதும் மற்றும் பங்கேற்பாளர்களிடமிருந்து கருத்துக்களை பெற்று இவ்வழிகாட்டுதலை மெருகேற்றுவதும் இந்தக் கலந்துரையாடலின் நோக்கமாகக் காணப்பட்டது. (05)

# பொருளாதார நெருக்கடியிலிருந்து மீள்வதற்கு தொடர்ந்தும் அர்ப்பணிப்புடன் செயற்பட தயார்

### ஷெகான் சேமசிங்க உறுதியளிப்பு



பொருளாதார நெருக்கடியிலிருந்து மீள்வதற்கு இலங்கை தொடர்ந்தும் அர்ப்பணிப்புடன் செயற்படும் என நிதி இராஜாங்க அமைச்சர் ஷெஹான் சேமசிங்க தெரிவித்துள்ளார்.

பொருளாதாரத்தை ஸ்திரப்படுத்துவதற்குத் தேவையான நடவடிக்கைகளை அரசாங்கம் எடுக்க வேண்டும் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

அத்துடன் 350 மில்லியன் டொலர் கடனுதவி வழங்குவதற்கு ஆசிய அபிவிருத்தி வங்கி இணக்கம் தெரிவித்துள்ளமைக்கு நன்றி தெரித்துள்ளார்.

நிதி நெருக்கடியின் போது அடிப்படைத் தேவைகளுக்கும் வாழ்வாதாரத்தை நிலைநிறுத்துவதற்கும் ஆசிய அபிவிருத்தி வங்கி வழங்கிய அவசர உதவிகளை இலங்கை பெரிதும் மதிப்பதாகவும் இராஜாங்க அமைச்சர் ஷெஹான் சேமசிங்க தெரிவித்துள்ளார். (05)

# மீண்டும் இலங்கைக்கு கடன் வழங்க ஆசிய அபிவிருத்தி வங்கி இணக்கம்

இலங்கையின் பொருளாதாரத்தை ஸ்திரப்படுத்துவதற்காக 350 மில்லியன் டொலர் கடனுதவி வழங்குவதற்கு ஆசிய அபிவிருத்தி வங்கி நடவடிக்கை எடுத்துள்ளது. ஆசிய அபிவிருத்தி வங்கி விடுத்துள்ள அறிக்கையில் குறித்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கொள்கை அடிப்படையில் வரவு செலவுத் திட்டத்தை வலுப்படுத்தும் நோக்கிலும், பொருளாதாரத்தை ஸ்திரப்படுத்தும் வகையில் இந்த கடன் வழங்கப்பட்டுள்ளதாக அந்த அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

அத்துடன் பொருளாதார நெருக்கடி காரணமாக இலங்கை மக்கள் எதிர்கொண்டுள்ள பிரச்சினைகள் தொடர்பாகக் கவலையடைவதாக ஆசிய அபிவிருத்தி வங்கியின் தலைவர் தெரிவித்துள்ளார். (05)

# 843 பொருள்களின் இறக்குமதி கட்டுப்பாடுகள் நீக்கப்பட்டன

இலங்கை மத்திய வங்கி இறக்குமதிக்கு விதிக்கப்பட்ட கட்டுப்பாட்டை தளர்த்தியதுடன் சுமார் 843 வகையான பொருள்களுக்கு அந்த பொருளகளை இறக்குமதி செய்யும் போது பொருள்களின் மொத்த மதிப்புக்கு சமமான 'பண வரம்பு தேவை' கட்டுப்பாட்டை நீக்கியுள்ளது.

இந்த 843 பொருள்களில் கையடக்கத் தொலைபேசிகள், குளிர்சாதனப் பெட்டிகள், மின் விசிறிகள், பழங்கள் உள்ளிட்ட பல்வேறு அத்தியாவசியப் பொருள்கள் உள்ளடங்குகின்றன எனவும் இந்த தீர்மானத்தால் எதிர்காலத்தில் பல அத்தியாவசியப் பொருள்களின் விலை குறைவடையும் எனவும் இலங்கை மத்திய வங்கி தெரிவித்துள்ளது. (05)

